# ஆழமான ஜெப வாழ்க்கை!



மோகன் சி. லாசரஸ்

# ஆழமான ஜெப வாழ்க்கை!



மோகன் சி. லாசரஸ்

**ஆழமான ஜெப வாழ்க்கை!**
ஆசிரியர் : மோகன் சி. லாசரஸ்

முதல் பதிப்பு – **2014 மே,** பிரதிகள் – **6,000**
**2**ம் பதிப்பு – **2014 ஜூன்,** பிரதிகள் – **10,000**
**3**ம் பதிப்பு – **2017 பிப்ரவரி,** பிரதிகள் – **2,000**

வெளியீடு:
**இயேசு விடுவிக்கிறார்,**
**நாலுமாவடி – 628 211,**
தூத்துக்குடி மாவட்டம்.

# பொருளடக்கம்!


1. **ஆழமான ஆவிக்குரிய அனுபவங்கள்!** 1

- இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்! 2
- பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்! 6
- அந்நிய பாஷைகளைப் பேசுங்கள்! 10
- ஆவியை அவித்துப் போடாதிருங்கள்! 16
- வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்! 18

  **1. வெளிப்பாட்டு வரங்கள்!**

  **2. பேசக் கூடிய வரங்கள்!**

  **3. வல்லமையின் வரங்கள்!**

- கர்த்தரோடு நெருக்கமாக இருங்கள்! 25

2. **ஆழமான ஜெப வாழ்க்கை!** 39

- காரியங்களை அறிந்து ஜெபிக்க வேண்டும்! 43
- தீர்க்கதரிசனத்தை அறிந்து ஜெபிக்க வேண்டும்! 47
- இரகசியங்களை அறிந்து ஜெபிக்க வேண்டும்! 52
- கர்த்தருடைய இருதயத்தை அறிந்து ஜெபிக்க வேண்டும்! 57

# ஆழமான ஆவிக்குரிய அனுபவங்கள்!

**“அவர்** –இயேசு– **போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்.” லூக்கா 5:4.**

இயேசு படகில் உட்கார்ந்து பிரசங்கம் பண்ணி முடித்த பிறகு, பேதுருவைப் பார்த்து, “படகை ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், வலைகளை வீசுங்கள்.” என்று சொன்னார். அவர் சொன்னபடியே படகை ஆழத்திலே கொண்டுபோய் வலைகளைப் போட்டு, திரளான மீன்களைப் பிடித்தார்கள்.

பொதுவாக, படகை கரையிலே நிறுத்தி வைத்திருக்கும்போது, அதன் பாதிப் பகுதி கடலிலும், மீதிப் பகுதி தரையிலுமாக இருக்கும். அந்தப் படகு கடலின் அலையில் எப்போதும் அடிபட்ட வண்ணமாக ஆடிக் கொண்டேயிருக்கும்.

இப்படித்தான், ஆவிக்குரிய நாமும் **இந்த உலகத்தோடு ஒட்டி வாழ்ந்து கொண்டிருக்கும் வரைக்கும், நம்மால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது.** அனேகர், “உலகத்திற்குள் பாதி...ஆவிக்குரிய வாழ்க்கைக்குள் பாதி!” என்று, இரட்டை வாழ்க்கை வாழ்கிறதினால்தான், ஆவிக்குரிய வாழ்க்கையின் மெய்யான ஆசீர்வாதத்தை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. கொஞ்சம் **ஆழமான ஆவிக்குரிய அனுபவத்திற்குள் நாம் கடந்து செல்ல வேண்டும்** என்று

கர்த்தர் விரும்புகிறார். சில காரியங்கள், உங்களுக்குத் தெரிந்ததாகத்தான் இருக்கும். ஆனால், அதைக் குறித்ததான ஒரு தெளிவில்லாமல் நீங்கள் இருக்கக்கூடும்! நீங்கள் அதைக் குறித்துத் தெளிவாக அறிந்து, அதில் உறுதியாகி விட்டால், ஆழமான ஆவிக்குரிய அனுபவத்திற்குள் உங்களால் நிலைத்து நிற்க முடியும். ஆகவே, ஒரு ஆரம்ப நிலையிலிருந்து, 'படிப்படியாக ஆவிக்குரிய ஆழத்திற்குள் எப்படிச் செல்வது?' என்பதைக் குறித்து, உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

# இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

**"...இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்." எபி. 2:4.**

இரட்சிப்பின் அனுபவத்தைக் குறித்து, "இவ்வளவு **பெரிதான இரட்சிப்பு**...!" என்பதாக பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது, தேவனுடைய பிள்ளைகளாக மாறுவது **(யோவான் 1:12).** இதுதான், கிறிஸ்தவ வாழ்க்கையின் முதலாவது ஆவிக்குரிய அனுபவம். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை நம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும்போது, "தேவனுடைய பிள்ளைகள்!" என்கிற அனுபவத்தை நாம் பெறுகிறோம்.

**"...ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்..." யோவான் 3:3.**

அதாவது, **"மனந்திரும்புங்கள்..." (மத்தேயு 4:17)** என்று, இயேசு பிரசங்கிக்கத் தொடங்கினார்.

**"நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது**

**பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." (அப். 2:38)** என்று, மனந்திரும்புதலைக் குறித்து பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

**"தேவன்...மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." அப். 17:30.**

ஆக, 'தேவனுடைய பிள்ளைகளாக மாறுவது', 'மனந்திரும்புவது', 'மறுபடியும் பிறத்தல்' என்பதெல்லாம், இரட்சிப்பின் அனுபத்தைக் குறிக்கிறது. அவைகள் வெவ்வெறு பெயர்களில் சொல்லப்பட்டாலும், ஒரே அனுபவத்தைத்தான் குறிக்கின்றன. ஒரு மனிதன் இரட்சிக்கப்படும்போதுதான், அவனுக்கு இயேசுவோடு ஒரு தொடர்பு உண்டாகிறது. அப்பொழுதுதான், அவன், "தேவனுடைய பிள்ளை!" என்கிற ஒரு நிச்சயத்திற்குள் வருகிறான். வெறும் பக்தியோடு இருப்பதினால், அவன் தேவனுடைய பிள்ளையாக இருக்க முடியாது. பக்தியுள்ளவர்களைக் கர்த்தர் நேசிக்கிறார். அதே சமயத்தில், **பாவிகளையும் அவர் நேசிக்கிறார். (மத்தேயு 9:13, மாற்கு 2:17, லூக்கா 5:32, 15:2, 1 தீமோ. 1:15).**

நீங்கள் கர்த்தர் மீது அன்பும், விசுவாசமும் வைத்திருக்கலாம்! சின்ன வயதிலிருந்தே நீங்கள் பக்தியோடு வளர்க்கப்பட்டிருக்கலாம்! தினமும் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, ஜெபிக்கிற ஒரு அனுபவம்கூட உங்களுக்கு இருக்கலாம்! ஆனாலும், ஒருவேளை நீங்கள் இரட்சிப்பின் அனுபவமே இல்லாமல்கூட இருக்கக் கூடும்!

'இரட்சிப்பின் அனுபவம்' என்பது, இயேசுவோடுகூட தனிப்பட்ட முறையில் ஐக்கியப்பட்டிருக்கிற திட்டமான ஒரு அனுபவம்! "நான் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன். இயேசுவின் இரத்தம் என்னைக் கழுவியிருக்கிறது. அந்த இரட்சிப்பின் நிச்சயமும், சந்தோஷமும் எனக்கு இருக்கிறது." என்று சொல்கிற அனுபவம் உங்களுடைய வாழ்க்கையில் கட்டாயம் இருக்க வேண்டும். அந்த அனுபவத்தை நீங்கள்

பெற்றிருக்கிறீர்களா? யோசித்துப் பாருங்கள். நீங்கள் **இரட்சிப்பின் அனுபவத்திற்குள் கட்டாயம் வந்தாக வேண்டும்.** இதுதான் முதல் அனுபவம்! இந்த இரட்சிப்பின் அனுபவத்தில், முக்கியமான அனுபவம் என்னவென்றால்,

**“அவர்கள் என்னைப்** –இயேசுவை– **பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.” அப். 26:18.**

இந்த வேத வசனத்தின் மூலமாக, ஒரு முக்கியமான காரியத்தைக் கர்த்தர் சொல்கிறார். “நான் இரட்சிக்கப்பட்டேன்.” என்றால், என்ன அர்த்தம்? “சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து தேவனுடைய ஆளுகைக்குள் வந்து விட்டேன்!” என்பதுதான். அதுதான் இரட்சிப்பின் உண்மையான அர்த்தம்!

இந்த இரட்சிப்பின் அனுபவத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளா விட்டால், “நீங்கள் சாத்தானுடைய அதிகாரத்திற்குள் இருக்கிறீர்கள்!” என்றுதான் அர்த்தம். இது எப்படிக் கிடைக்கிறது?

**“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;...” எபே. 2:8.**

நாம் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம். அதாவது, “ஆண்டவரே, என் பாவத்தை மன்னியும். உம்முடைய இரத்தத்தினால் என்னைக் கழுவும். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள். நான் பாவத்தில் உருவானேன். உம்முடைய இரத்தத்தினால் என்னைக் கழுவி, உம்முடைய பிள்ளையாக என்னை மாற்றி விடும்.” என்று, நாம் உண்மையாக நம்முடைய பாவத்தை அறிக்கை செய்யும்போது,

கர்த்தருடைய கிருபை நம் மீது வரும். அவர் நம்முடைய பாவங்களையெல்லாம் மன்னித்து, “தேவனுடைய பிள்ளை!” என்கிற அனுபவத்தை நமக்குத் தருகிறார்.

அதை எப்படிப் பெற்றுக் கொள்வது? கர்த்தரை விசுவாசத்தோடு துதிக்கும்போது, இரட்சிப்பின் சந்தோஷம் உங்களுக்குள் உண்டாகும். அந்த சந்தோஷம் உங்களுக்குள் இருக்க வேண்டும். ‘இரட்சிப்பு!’ இதுதான் ஆவிக்குரிய வாழ்க்கையின் முதல் அனுபவம். அதை எப்படி நிச்சயித்துக் கொள்வது?

**“நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.” ரோமர் 8:16.**

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதற்கு என்ன அடையாளம்? சிலர், “நீங்கள் ஏதாவது தரிசனம் பார்த்திருந்தால்தான் இரட்சிக்கப்பட்டதற்கு அடையாளம்!” என்பார்கள். சிலருக்கு அப்படிப்பட்ட சில அனுபவம் இருக்கலாம்! நான் இரட்சிக்கப்பட்ட நாள், இரவு முழுவதும் ஜெபித்து, அதிகாலை 4:00 மணிக்குக் கர்த்தர் என்னோடு பேசினார். அன்றைக்கு ஆவியானவருடைய சத்தத்தை நான் கேட்டேன். இப்படிப்பட்டதான அனுபவம் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதல்ல.

பாவியான ஒரு மனிதன், கர்த்தரிடத்தில், “நான் பாவி, என்னை மன்னியும்.” என்று ஒரு நிமிடத்தில் ஜெபித்து விட்டால், அங்கே இரட்சிப்பு உண்டாகிறது. அப்படியானால், கர்த்தருடைய இரட்சிப்பிற்கு முக்கியமான அடையாளம், “நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்!” என்று கர்த்தருடைய ஆவியானவர் நம்முடைய ஆவியிலே சாட்சி கொடுக்கிறார். வெளிப்படையான அடையாளங்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆனால், “நீ தேவனுடைய பிள்ளை!” என்கிற உள்ளான நிச்சயத்தை ஆவியானவர்

கொடுக்கிறார். இந்த சாட்சி உடையவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். இது, முதல் அனுபவம்.

இந்த இரட்சிப்பின் அனுபவத்தோடு நின்று விடக் கூடாது. அடுத்த ஒரு அனுபவம் இருக்கிறது. அதுதான், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிற ஒரு அனுபவம்.

# பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

இயேசு தன்னுடைய சீஷர்களைப் பார்த்து, **“...பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.” (யோவான் 20:22)** என்று, ஒரு கட்டளை கொடுத்தார்.

**யோவேல் 2:28, அப். 2:17** வசனங்களில், “...**நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்;...**” என்று தீர்க்கதரிசனமாகவே சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய வாக்குத்தத்தம் இது!

ஆகவே, **எல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும்** என்பது, தேவனுடைய சித்தம்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்து முடிக்க, குறிப்பிட்ட ராஜாக்கள் மீது, தீர்க்கதரிசிகள் மீது, நியாயாதிபதிகள் மீது, சில குறிப்பிட்ட நேரங்களில் ஆவியானவர் இறங்கினார், அவ்வளவுதான்!

ஆனால், புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வாக்குத்தத்தம் என்னவென்றால், ‘**மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன்!**’ என்பதுதான். இயேசுவை விசுவாசித்து, அவரை ஏற்றுக் கொள்கிற **எல்லோர் மீதும் கர்த்தர் தம்முடைய ஆவியை ஊற்ற விரும்புகிறார்.** இதுதான் தேவனுடைய சித்தம்!

அது மாத்திரமல்ல, என்றென்றைக்கும் உங்களோடு இருக்கிற தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை உங்களுக்குப் பிதாவானவர் தந்தருள்வார்! இதுதான், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்கிற நமக்குக்

கிடைத்த ஒரு புதிய அனுபவம். "**...நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். அப். 1:4.**

**"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து...எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்... (அப். 1:8)** என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

**"பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.**

**அப்பொழுது பலத்து காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.**

**அல்லாமலும்...அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்." அப். 2:1-4.**

"நாம் இரட்சிக்கப்படும்போதே திரித்துவ தேவன் நமக்குள் வந்து விட்டார். இன்னொரு அனுபவமான அபிஷேகம், ஆவியில் நிறைவது என்றெல்லாம் ஒன்றும் கிடையாது." என்று வியாக்கியானம் பண்ணக் கூடியவர்களும் இருக்கிறார்கள்!

ஆனால், பரிசுத்த வேதாகமம் தெளிவாக இரண்டையும் வித்தியாசப்படுத்தி நமக்குக் காட்டுகிறது. வேத வசனங்களை நன்றாக வாசித்துப் பார்த்தால், அதைப் பற்றி நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இரட்சிப்பு வேறு! பரிசுத்த ஆவியினால் நிரம்புகிற அனுபவம் வேறு! ஒருசிலர் இரட்சிக்கப்படும்போதே, பாவத்தை விட்டு மனந்திரும்பும்போதே, கர்த்தர் அவர்களுடைய இருதயத்தை உடனே தமது ஆவியினால் நிரப்பி விடுகிற அனுபவங்களைப் பெற்றுக் கொள்வார்கள். எப்படியென்றால், முதலாவது நாம் இரட்சிக்கப்படும்போது,

பரிசுத்த ஆவியானவரின் கிரியை இல்லாமல் இரட்சிக்கப்பட முடியாது. ஆவியானவர்தான் நம்முடைய பாவத்தை உணர்த்தி, நம்மை மனந்திரும்ப வைக்கிறார்.

அதைக் குறித்து அப். **பவுல்** எழுதும்போது;

**"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.**

**அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்." (எபே. 1:13,14)** என்று எழுதுகிறார்.

நீங்கள் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டீர்கள். ஆவியின் அச்சாரத்தைப் பெற்றுக் கொண்டீர்கள். அதாவது, நாம் விசுவாசிகளானபோது, "தேவனுடைய பிள்ளைகள்!" என்று ஆவியானவர் நம்மை ஒரு முத்திரை பண்ணுகிறார். இந்த, 'முத்திரை' பண்ணப்படுகிற அனுபவம் வேறு! பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிற அனுபவம் வேறு! என்பதை நன்றாக நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

**உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்." யோவான் 14:16,17.**

ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள்ளே இருக்கிறார்! பிறகு ஏன் பெந்தெகோஸ்தே நாளுக்காக இயேசு காத்திருக்கச்

சொன்னார்? அவர்கள் மனந்திரும்பி, இயேசுவைப் பின்பற்ற தங்களை அர்ப்பணித்தபோது, பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஆனால் இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து, “இது போதாது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.” என்று, சொல்வதைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். **சவுல்**, தமஸ்குவுக்குப் போகிற வழியில் இயேசுவால் தொடப்பட்டு, இரட்சிக்கப்பட்டு, தன்னை முழுவதுமாக அவருக்கு ஒப்புக் கொடுத்து விட்டார். ஆனால், 3 நாட்கள் உபவாசம் பண்ணி ஜெபித்துக் கொண்டிருந்தபோது, 3 நாட்கள் கழித்து, ‘**அனனியா**’ என்கிற ஒரு தீர்க்கதரிசியைக் கர்த்தர் அனுப்பினார்.

அந்தத் தீர்க்கதரிசி சவுலினிடத்தில் வந்து, **“...சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்.” அப். 9:17.**

பாருங்கள், சவுல், 3 நாட்களுக்கு முன்பாகத்தான் இரட்சிக்கப்பட்டார்! ஆனாலும், “அவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட ஒரு தீர்க்கதரிசியைக் கர்த்தர் அனுப்பினார்.” என்று, பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. அப்படியானால், இரட்சிக்கப்பட்ட அனுபவத்தோடு இருந்து விடக் கூடாது. **பரிசுத்த ஆவியின் நிறைவையும் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். எபேசு** பட்டணத்திலுள்ள விசுவாசிகள், இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள்தான்! இரட்சிக்கப்பட்டவர்கள்தான்! பவுல் அவர்களைச் சந்திக்கும்போது, “**நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?**” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “**பரிசுத்தாவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.**” **அப். 19:2.**

"பவுல் அவர்கள்மேல் தன் கைகளை வைத்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அந்நிய பாஷைகளைப் பேசி, தீர்க்கதரிசனம் உரைத்தார்கள்." என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. **(அப். 19:6).**

அப்படியானால், "இரட்சிக்கப்பட்ட **விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிற ஒரு அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**" என்பதை வேதாகமம் வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது.

ஆகவே, "இரட்சிக்கப்பட்டபோதே எனக்கு எல்லாம் முடிந்து விட்டது." என்று நினைத்துக் கொண்டிருக்காதபடி, அடுத்த ஆவிக்குரிய அனுபவமாகிய பரிசுத்த ஆவியின் நிறைவுக்குள் நாம் கடந்து வர வேண்டும். பரிசுத்த ஆவியின் அனுபவத்தை, வாஞ்சித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது, புதிய பாஷைகளை, அந்நிய பாஷைகளை அவர் நமக்குத் தருவார்!

# அந்நிய பாஷைகளைப் பேசுங்கள்!

**"நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்;" 1 கொரி. 14:5.**

அந்நிய பாஷையில் பேசுகிறவன் கர்த்தரோடு பேசுகிறான்! **(1 கொரி. 14:1–4).** நீங்கள் கர்த்தரோடு பேச வேண்டும். நீங்கள் கர்த்தரோடு நெருங்க வேண்டுமானால், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அந்நிய பாஷைகளைப் பேச வேண்டும்.

**"அந்நியபாஷையில் பேசுகிறவன்,... மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்." (1 கொரி. 14:2)** என்று, பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

'இரகசியம்' என்றால், என்ன அர்த்தம்? இரண்டு பேர் சேர்ந்து, யாருக்கும் தெரியாமல் பேசிக் கொள்வதுதான் இரகசியம். இன்றைக்கு, இந்தச் சின்ன ஒரு விஷயத்தைக்கூடப் புரிந்து கொள்ளாதபடி, "பெந்தெகோஸ்தே நாளில் அன்றைக்கு அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசியபோது, அது எல்லோருக்கும் புரிந்ததே! இன்றைக்கு இவர்கள் பேசும் அந்நிய பாஷை புரியவில்லையே!" என்பதாக சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்.

பெந்தெகோஸ்தே நாளில், உலகம் முழுவதும் சுவிசேஷம் எடுத்துச் சொல்லப்படுவதற்கு வித்தியாசமான முறையில் ஆவியானவர் செயல்பட்ட காரியம் அது. பின்பு பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளுப்பட்ட பிறகு, பல விதமான பாஷைகள் வெளிப்படவில்லை. அந்நிய பாஷை வெளிப்பட்டது. அதன் அர்த்தம் யாருக்கும் புரியாது.

பேசுகிறவர்களுக்கும், அதைக் கேட்கிற கர்த்தருக்கும் மட்டுமே அது புரியும். அதாவது கர்த்தரும், அந்நிய பாஷை பேசும் விசுவாசியும், ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளக் கூடிய இரகசியம்! "அந்நிய பாஷையில் பேசுவதென்பது, கர்த்தரோடு இரகசியம் பேசுவது' என்று மட்டுமல்ல, '**அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினால்...**" **(1 கொரி. 14:2)** என்று, பரிசுத்த வேதாகமம் மிகத் தெளிவாகச் சொல்கிறது.

ஒருவேளை, "அர்த்தம் தெரியாத இப்படிப்பட்ட ஒரு பாஷை தேவையா?" என்கிற ஒரு கேள்வி நம்முடைய உள்ளத்தில் எழும்பலாம்!

நாம் பரிசுத்த ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேசப் பேச, நம்முடைய பக்தி விருத்தியடையும். கர்த்தரோடுள்ள ஐக்கியம் விருத்தியடையும். ஆகவே, நம்முடைய பிரயோஜனத்திற்காகவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் வளர்வதற்காகவுமே கர்த்தர் இந்த அனுபவத்தை நமக்குத் தந்திருக்கிறார்.
ஆகவேதான், "**எல்லோரும் அந்நிய பாஷைகளைப்**

**பேசும்படி விரும்புகிறேன்.**" என்று, ஆவியானவர் பரி. பவுல் மூலமாக, தன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். **(1 கொரி. 14:5).**

எனவே, நம்முடைய கர்த்தருடைய விருப்பத்திற்கிணங்க, நாம் எல்லோரும் பரிசுத்த ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷைகளைப் பேச வேண்டும். அந்த அனுபவத்தை நீங்கள் வாஞ்சித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். அனேகர் இந்த அனுபவத்தை மறுக்க மாட்டார்கள். ஆனால், அதைத் தாகத்தோடு கேட்டுப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். நாம் அப்படி இருக்கக் கூடாது. நாம் எல்லோரும் இந்த ஆவிக்குரிய அனுபவத்திற்குள் செல்ல வேண்டும். கர்த்தரோடு நாம் பேச வேண்டும்.

**"அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்." 1 கொரி. 14:13.**

நீங்கள் பேசுகிற அந்நிய பாஷைக்கு அர்த்தம் உண்டு! கர்த்தர் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வார். உங்களுக்கும் அதன் அர்த்தம் தெரிய வேண்டுமானால், தேவ சமூகத்தில் போய், "நான் பேசுகிற அந்நிய பாஷையின் அர்த்தத்தை எனக்கும் விளங்கப் பண்ணும் ஆண்டவரே!" என்று ஜெபத்தில் கேட்டால், கர்த்தர் அதை உங்களுக்கும் விளங்கப் பண்ணுவார்.

1974ம் வருடம் தஞ்சாவூரில் நடைபெற்ற **'BLESSO'** கூட்டத்தில்தான் நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றேன். அந்தக் கூட்டத்தில் தேவ ஊழியர் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய செய்தியைப் பகிர்ந்து கொண்டு, ஜெபத்தில் நடத்தியபோது, நான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, பல மணி நேரம் அந்நிய பாஷை பேசினேன். பல மணிநேரம் கழித்துத்தான் எனக்கு நினைவே வந்திருக்கிறது! முதல்முறை ஆவியானவர் என் மீது ஊற்றப்பட்டபோது, அன்றையிலிருந்துதான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அந்நிய பாஷை பேச ஆரம்பித்தேன். சில வருடங்கள் கடந்தன. பரிசுத்த

ஆவியினால் நிரம்புதல், அந்நிய பாஷை பேசுதல், ஆவியில் களிகூருதல் எல்லாம் எனக்குள் இருந்தது. ஆனால், “இந்த அந்நிய பாஷைக்கு அர்த்தம் இருக்கிறது. அதை அறிந்து கொள்ள வேண்டும்.” என்று எனக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. எனக்கும் அதைப் பற்றி ஒன்றும் தெரியாது.

ஒரு சமயம், ஒரு ஊழியக்காரர் எழுதிய புத்தகத்தை நான் வாசித்தபோது, “**...அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்.” (1 கொரி. 14:13)** என்ற வேத வசனத்தை அதில் குறிப்பிட்டிருந்தார்.

நாம் பேசுகிற அந்நிய பாஷைக்கு அர்த்தம் உண்டு! மற்றவர்களுக்குப் புரியவில்லை என்றாலும், ‘கர்த்தருக்கு அது புரிகிறது!’ என்றால், அது ஒரு அர்த்தமுள்ள பாஷைதான். கர்த்தர் அதை விளங்கிக் கொள்வார். “நாம் பேசுகிற அந்நிய பாஷை நமக்கும் விளங்க வேண்டுமானால், அதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்.” என்று சொல்லப்பட்ட வார்த்தை, எனக்குக் கண்களைத் திறந்ததுபோல் இருந்தது. அதன் பிறகுதான், எனக்குள் அதைக் குறித்தான ஒரு தாகம் உண்டானது.

ஒருநாள் நான் வனாந்திரமான ஒரு இடத்திற்கு ஜெபிக்கப் போனபோது, **1 கொரி. 14:13**ம் வசனத்தை வாசித்து, “ஆண்டவரே, நான் பேசுகிற அந்நிய பாஷையின் அர்த்தம் எனக்குத் தெரிய வேண்டும். அந்தக் கிருபையை எனக்குத் தாரும்.” என்று, அந்த வேத வசனத்தை வைத்து அதிக நேரம் ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று பரிசுத்த ஆவியானவர் என் மீது இறங்கினார். நான் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷை பேசினேன். அதன் பிறகு, நான் பேசிய அந்நிய பாஷைக்கு வியாக்கியானம் வந்தது! நான் பேசுகிற அந்நிய பாஷை மூலமாக, தேவ செய்தி வந்தது! அப்பொழுது, “நானே என் கற்பனையில் பேசுகிறேனா? அல்லது பிரம்மையா?” என்று நான் எனக்குள்ளேயே சந்தேகப்பட்டேன்.

அந்தச் சமயத்தில் மறுபடியும் ஆவியானவர், “நான்தான் உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறேன். நீ சந்தேகப்படாதே.” என்றார். அந்த நாளிலிருந்து என் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டாயிற்று.

இப்பொழுது நான் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷை பேசினால், “நான் ஆவியில் கர்த்தரைத் துதிக்கிறேனா? ஆராதிக்கிறேனா? ஜெபம் பண்ணுகிறேனா? எதற்காக ஜெபம் பண்ணுகிறேன்? நான் எந்த தேசத்திற்காக ஜெபம் செய்கிறேன்?” அல்லது, “பிசாசோடு யுத்தம் பண்ணுகிறேனா? என் ஆவிக்குள் என்ன நடக்கிறது?” என்கிற காரியங்களை என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறது! இதை என்னால் மாத்திரமல்ல, கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிற யாவரும் அவருடைய சமூகத்தில் போய் ஜெபித்து, இதற்கான கிருபைகளைப் பெற்றுக் கொண்டால், அவர்களாலும் விளங்கிக் கொள்ள முடியும்.

நீங்கள் அந்நிய பாஷையில் கர்த்தரை ஆராதிக்கலாம்! அந்நிய பாஷையில் கர்த்தரைத் துதித்துப் பாடலாம்! அந்நிய பாஷையில் விண்ணப்பங்களை ஏறெடுக்கலாம்! அந்நிய பாஷையில் பிசாசை எதிர்த்து, யுத்தம் பண்ணலாம்! இப்படியாக அனேக ஆவிக்குரிய காரியங்களை ஆவியானவர் உங்களை நிரப்பி, நடத்துவார்! உங்களைப் பயன்படுத்துவார்!

இந்த அனுபவத்திற்குள் நீங்கள் வந்து விட்டால், உங்கள் ஜெப வாழ்க்கை மிக ஆச்சரியமாக மாறி விடும். ஆக, **அந்நிய பாஷைக்கு அர்த்தம் உண்டு!** அதை நீங்கள் உங்கள் இருதயத்தில் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அதுதான் பெரிய சந்தோஷம்! சில சமயம், நான் அந்நிய பாஷை பேசிக் கொண்டேயிருப்பேன். என்னுடைய இருதயம் சந்தோஷத்தில் பொங்கி மகிழும்! “நான் சந்தோஷத்தில் ஆண்டவரைத் துதித்து மகிழ்கிறேன்...” என்று எனக்குத் தெரியும்.

அந்நிய பாஷையில் துதித்து மகிழ்வதைச் செய்து பாருங்கள், அந்த நேரமே மிகவும் வித்தியாசமாக இருக்கும்.

நீங்கள் தமிழிலும் அவரை ஆராதிக்கலாம்! ஆங்கிலத்திலும் ஆராதிக்கலாம்! அந்நிய பாஷையிலும் ஆராதிக்கலாம்! நீங்கள் அதைச் செய்து பாருங்கள், அப்பொழுது நீங்கள் பரலோகத்திற்குள் நுழைவதைப்போல உணர்வீர்கள்! அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக நீங்கள் நிற்பதைப்போல உணர்வீர்கள்! நீங்கள் இயேசுவுக்கு முன்பாக நிற்பதைப்போல உணர்வீர்கள்! உங்களுடைய இருதயம் களிகூரும்! அப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை ஆவியானவர் உங்களுக்குத் தருவார்.

இன்றைக்குக் கர்த்தர், உங்களுக்கு இந்த அனுபவத்தைத் தர விரும்புகிறார். **இந்த அனுபவத்திற்குள் நீங்கள் இன்னும் ஆழமாகக் கடந்து வர வேண்டும்** என்று கர்த்தர் விரும்புகிறார். இன்றைக்கு இதன் அர்த்தத்தைக் கர்த்தர் உங்களுக்குச் சொல்லித் தரப் போகிறார். இன்றுமுதல், உங்கள் ஜெப வாழ்க்கையைக் கர்த்தர் மாற்றப் போகிறார். இனிமேல் உங்கள் ஜெப வாழ்க்கை உங்களுக்குக் கடினமாக இருக்காது. நீங்கள் ஜெபத்தை நிறுத்துவதற்குத்தான் கஷ்டப்படுவீர்கள். பரிசுத்த ஆவிக்குள் நிறைந்து விட்டால், கர்த்தர் பரலோகத்தை உங்களுக்குச் சமீபமாகக் கொண்டு வந்து விடுவார்.

சில சமயம், உங்களைச் சுற்றிலும் தேவ தூதர்கள் நின்று பாடுவதை நீங்கள் காண்பீர்கள்! அவர்களோடு சேர்ந்து நீங்களும் கர்த்தரைத் துதித்து மகிழ்வீர்கள்! அப்பொழுது, நேரம் போவதே உங்களுக்குத் தெரியாது. அப்படிப்பட்டதான ஒரு அனுபவத்திற்குள் நீங்கள் வர வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.
நீங்கள் கூடி ஜெபிக்கும்போது மட்டுமல்ல, உங்களுடைய தனி ஜெபத்திலும் இப்படிப்பட்டதான அனுபவத்தோடு நீங்கள் கர்த்தரை நெருங்க வேண்டும்.

‘பரிசுத்த ஆவியின் அபிஷேகம்’, ‘அந்நிய பாஷை’ இவைகளுக்குள் இருக்கிற ஆசீர்வாதங்கள் சொல்லி முடியாதவை. இந்த அனுபவத்தை, பரி. **பவுல்** பெற்றிருந்ததால்தான், “**நீங்கள் எல்லோரும் அந்நிய**

**பாஷை பேச வேண்டும்.**" என்று அவரும் வற்புறுத்திச் சொல்வதை, பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கிறோம். இந்த அனுபவத்தை நீங்கள் வாஞ்சிக்க வேண்டும்.

# ஆவியை அவித்துப் போடாதிருங்கள்!

பரிசுத்த ஆவியின் அனுபவத்தை பெற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. "**ஆவியை அவித்துப் போடாதிருங்கள்.**" **(1 தெச. 5:19)** என்று, பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. தினமும் பரிசுத்த ஆவியில் நிரம்பி, நீங்கள் ஜெபிக்க வேண்டும். **கர்த்தருடைய வசனத்தை சும்மா வெறுமனே கடமைக்காக வாசிக்கக் கூடாது.** நீங்கள் வேத வசனத்தை முழங்காலில் நின்று தியானிக்கத் தியானிக்க, பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபிக்க ஜெபிக்க, உங்களுக்குள் அனல் உண்டாகும்! இந்த அனுபவத்திற்குள் நீங்கள் வரும்போது, எப்பொழுதும் கர்த்தருக்காக எழுந்து பிரகாசிக்கிற விளக்காக இருப்பீர்கள்! ஆவியில் அனலாக இருப்பீர்கள்!

ஒரு அக்கினி எரிந்து கொண்டேயிருந்தால், எந்த விஷப் பூச்சியும் உள்ளே வர முடியாது. பாம்பு வந்தால்கூட எரிந்து செத்துப் போய்விடும். அதேபோல, நீங்கள் ஆவியில் அனலாக இருந்து கொண்டேயிருந்தால், எந்த விதமான பாவ சோதனைகள் உங்கள் பக்கத்தில் வந்தாலும், உங்களை அவைகள் மேற்கொள்ள முடியாது. அதனால்தான், "**...ஆவியிலே அனலாயிருங்கள்;...**" **(ரோமர் 12:11)** என்று, பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. நீங்கள் எங்கு சென்றாலும், ஆவியில் அனலோடு செல்ல வேண்டும். ஊழியத்திற்குச் செல்லும்போது மாத்திரமல்ல, அதிகாலை எழுந்து, ஆவியில் ஜெபித்து, அந்த அனலோடுதான் நீங்கள் எங்கும் போக வேண்டும்.

அனேகர், ஊழியத்திற்குப் போகும்போது மட்டும் ஆவியின் அனலோடு போகிறார்கள். மற்ற நேரங்களில் அதே ஆவியின் அனலோடு இருப்பதில்லை. அப்படியல்ல, '**தேவப் பிள்ளைகள்...**' என்றால், **24 மணி நேரமும் ஆவியில் அனலாகத்தான் இருக்க வேண்டும்!**

**உன்னதப் பாட்டில்** ஒரு பக்தன் இவ்விதமாக எழுதுகிறார்: "**நான் நித்திரைபண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது;" (உன். 5:2)** என்று. நீங்கள் நித்திரை பண்ணும்போதுகூட உங்கள் ஆவியில் அனலோடு நித்திரை பண்ண வேண்டும். அப்படியிருந்தால், நீங்கள் அதிகாலை எழும்பும்போது, கர்த்தரிடத்தில் பேசிக் கொண்டே எழும்புவீர்கள். உங்கள் சரீரம் நித்திரை பண்ணினாலும், உங்களுடைய ஆத்துமா கர்த்தரோடு இணைந்திருக்கிற ஒரு அனுபவத்தோடு இருந்து கொண்டிருப்பீர்கள். 'கிறிஸ்தவ வாழ்க்கை' என்பது, விவரிக்க முடியாத, சந்தோஷமான அனுபவம் நிறைந்த ஒரு வாழ்க்கை!

ஞாயிற்றுக்கிழமை ஆலய ஆராதனைக்குச் சென்று, ஆளோடு ஆளாக காணிக்கை போட்டு விட்டு வருவதல்ல கிறிஸ்தவ வாழ்க்கை. ஒவ்வொரு நிமிடமும் ஆவியானவரோடு களிகூருகிற அனுபவத்தோடு இருப்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. நீங்கள் பிரயாணப்பட்டாலும் ஆவியில் களிகூர வேண்டும். ஒருவேளை உங்களருகில் இருக்கிறவர்கள்கூட, உங்களுடைய ஆவியில் களிகூருதலைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாக, 'ஏன் இவர் சிரித்து கொண்டேயிருக்கிறார்?' என்றுகூடச் சொல்லலாம். ஆனால், உங்களுக்கே தெரியாமல் நீங்கள் ஆவியில் களிகூர்ந்து கொண்டேயிருப்பீர்கள். இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை! இப்படிப்பட்டதான ஒரு அனுபவத்திற்குள் நாம் கடந்து வர வேண்டும். இதைக் கர்த்தர் விரும்புகிறார்.

இந்த ஆழத்திற்குள் நீங்கள் வந்து விட்டால், பிசாசின் எந்த சோதனையும் உங்களை நெருங்க

முடியாது. எந்த சோர்வுகளும் உங்களை மேற்கொள்ள முடியாது. எப்பொழுதும் நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள். எப்பொழுதும் ஆவிக்குரிய மகிமையோடு இருப்பீர்கள். இப்படித்தான் நாம் இருக்க வேண்டும். கர்த்தர் இதை விரும்புகிறார்.

இதோடு நீங்கள் நின்று விடவும் கூடாது. சிலர், காலா காலமாக ஒரே அந்நிய பாஷைகளைப் பேசிக் கொண்டேயிருப்பார்கள். அவர்களிடம், "எப்பொழுது அந்நிய பாஷைகளைப் பெற்றீர்கள்?" என்றால், "பல வருடங்கள் ஆகி விட்டது" என்பார்கள். ஆனாலும், அந்த நாலு வார்த்தைகளையே திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். நான் அதைப் பரிகாசம் பண்ணவில்லை. அதற்கு மேலேயும் ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் வர வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும்கூட. ஆகவே,"புதிதான பாஷைகளைத் தாரும்." என்று கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும். ஒவ்வொரு நாளும் புதிய புதிய பாஷைகளைக் கர்த்தர் தருவார். காரணம், **நாள்தோறும் கர்த்தருடைய கிருபை புதிதாகவே இருக்கிறது. புல. 3:22,23.**

# வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

.

**"அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்." 1 கொரி. 14:1.**

இந்த வார்த்தை ஊழியக்காரர்களுக்கு எழுதப்பட்டவையல்ல, விசுவாசிகளுக்கு எழுதப்பட்டது. "வரங்கள்' என்றாலே, ஊழியக்காரர்கள்தான் வரம் பெற்றவர்கள்!" என்று அனேகர் நினைக்கிறார்கள்.

அப்படி அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறபடியினால்தான், இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை இழந்து விடுகிறார்கள்.

வரங்கள் ஊழியக்காரர்களுக்கு மாத்திரமல்ல, எல்லா விசுவாசிகளுக்கும்கூட உரியது! ஒன்பது வரங்களும் உங்களுக்குரியது. அதைக் கர்த்தர் உங்களுக்குத் தரப் போகிறார்.

**"நீங்கள் ஒவ்வொருவரும் வரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்."** என்று கர்த்தர் விரும்புகிறார். நீங்கள் யாராக இருந்தாலும், வரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் கர்த்தருக்காக எழும்பிப் பிரகாசிக்க வேண்டும். கர்த்தர் அதை விரும்புகிறார். அதனால் வரத்தை விரும்புங்கள்.

**"அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை." 1 கொரி. 12:1.**

இது விசுவாசிகளுக்கு ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார். அனேகருக்கு இதைப் பற்றித் தெரிவதில்லை. நீங்கள் அதை ஆவலாக வாசித்து அறிய வேண்டும். ஆவிக்குரிய 9 வரங்களைக் குறித்து, சகோ. **சாம் ஜெபத்துரை** அவர்கள், நீங்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளும்படியாக, ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தை நீங்கள் வாசித்தால், பரிசுத்த வேதாகமத்தின் வெளிச்சத்தில் வரங்களைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

அதை நீங்கள் வாசித்து, கர்த்தருடைய பாதபடிக்குப்போய், "ஏன் அந்த வரத்தை எனக்குத் தரக் கூடாது? நான் உம்முடைய பிள்ளையல்லவா? என்னை நீர் அபிஷேகம் பண்ணவில்லையா? எனக்கு நீர் அந்த வரத்தைத் தர வேண்டும். நான் உமக்குச் சாட்சியாக இருக்க வேண்டும்...ஆண்டவரே!" என்று கேளுங்கள். நீங்கள் அந்த ஞான வரத்தைக் குறித்து அறிந்து கொண்டால்தான், அதை உங்களால் விரும்ப முடியும்.

கர்த்தர், நம்முடைய தகுதியைப் பார்த்து எதையும் தருகிறவரல்ல. அப்படியானால், அவருக்கு முன்பாக நிற்க ஒருவரும் தகுதி உள்ளவர்களல்ல. கர்த்தரிடத்தில் கிருபை

வரங்களைப் பெற என்ன தகுதி வேண்டுமென்றால், ‘தகுதி இல்லை.’ என்று யார் நினைக்கிறார்களோ, அதுதான் தகுதி! கர்த்தரிடத்தில் போய், ‘எனக்குத் தகுதி இல்லை.’ என்று சொல்லுங்கள். அவருடைய உள்ளம் குளிர்ந்து விடும். கர்த்தர் சொல்வார், “நீதான் எனக்கு வேண்டும். உனக்குத்தான் இந்த வரங்களைத் தர விரும்புகிறேன்.” என்பார். ‘தகுதி இல்லை.’ என்று சொல்லி, உங்களைத் தாழ்த்திக் கொண்டேயிருங்கள். அப்பொழுது அவருடைய கிருபை வரங்கள் உங்களைத் தொடர்ந்து வரும்.

ஆவிக்குரிய வரத்தை வாஞ்சிக்க வேண்டும். **ஆவிக்குரிய எல்லைக்குள் கடந்து போக வேண்டும்.** இன்னும் வெறும் அந்நிய பாஷைகளை மாத்திரமே பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

**“...ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும்,**

**வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,**

**வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.” 1 கொரி. 12:8-10.**

இப்படியாக, பரிசுத்த வேதாகமத்தில் 9 வரங்களைக் குறித்து, எழுதப்பட்டிருக்கிறது. மாத்திரமல்ல, இன்னும் சில வரங்களைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளது.

அதாவது ஊழியத்தில் ஞானமாய் செயல்படுவது மற்றும் பல காரியங்களைக் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த ஒன்பது வரங்களான:

**ஞானத்தைப் போதிக்கும் வசனம்!**
**அறிவை உணர்த்தும் வசனம்!**
**குணமாக்கும் வரம்!**
**அற்புதங்களைச் செய்யும் வரம்!**
**விசுவாசம்!**
**தீர்க்கதரிசனம் உரைத்தல்!**
**வியாக்கியானம் பண்ணுதல்!**
**ஆவியைப் பகுத்தறிதல்!**
**பற்பல பாஷைகளைப் பேசுதல்!**

போன்ற 9 வரங்கள் இருக்கின்றன. இந்த 9 வரங்களையும் 3 பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

## 1. வெளிப்பாட்டு வரங்கள்!

ஞானத்தைப் போதிக்கும் வசனம்! அறிவை உணர்த்தும் வசனம்! ஆவிகளைப் பகுத்தறிதல்! இவைகள் காரியங்களை வெளிப்படுத்துகிற வெளிப்பாட்டு வரங்கள்! இந்த வரத்தின் மூலம், நிகழ்காலத்தை அறிந்து கொள்ளலாம்! வரும் காலத்தை அறிந்து கொள்ளலாம்! கர்த்தருடைய இருதயத்தில் இருப்பதை அறிந்து கொள்ளலாம்! ஆவிக்குரிய உலகத்தில் நடக்கிற காரியங்களை அறிந்து கொள்ளலாம்! ஆவிகளைப் பகுத்தறியலாம்! ஆவிக்குரிய உலகத்தில் மறைவாகக் கிரியை செய்கிற சாத்தானின் கிரியைகளையும் இந்த வரத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்! இவைகள் வெளிப்பாட்டு வரங்கள்!

## 2. பேசக்கூடிய வரங்கள்

**பற்பல பாஷைகளைப் பேசுதல்!**
**பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்!**
**தீர்க்கதரிசனம் உரைத்தல்!**

நமக்குள் ஆவியானவர் பலமாகக் கிரியை செய்து, அடக்கிக் கொள்ள முடியாதபடி, பேசும்படியான ஒரு ஏவுதலை உண்டாக்குவார். இவைகளை நாம் பேச வேண்டும்.

'அந்நிய பாஷை' என்பது வேறு, 'பற்பல பாஷைகளைப் பேசுவது' என்பது வேறு. அந்நிய பாஷையில் பேசுகிற காரியம், கர்த்தருடைய பிள்ளைகளாகிய எல்லோருக்கும் உரியது. இந்த அந்நிய பாஷை எல்லோரும் பேச வேண்டும்.

அதே சமயத்தில், 'பற்பல பாஷைகளைப் பேசுவது' என்பது, உலகத்தில் பற்பல இடங்களில் பேசப்படும் பற்பல பாஷை. இந்தக் காரியத்தைக் குறித்து நீங்கள் இது சம்மந்தப்பட்ட புத்தகங்களில் வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

**பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்!**

ஒருவர் அந்நிய பாஷைகளைப் பேசினால், இன்னொருவரால் அதன் அர்த்தத்தைச் சொல்ல முடியும். நீங்கள் கர்த்தரிடத்தில் ஜெபித்தால், அதன் அர்த்தத்தை அவர் உங்களுக்குச் சொல்லித் தருவார். ஒருவர், 'சத்தமாக அந்நிய பாஷை பேசுகிறார்' என்றால், அது சபைக்குரிய செய்தியாக இருக்கும். உங்களால் அதை விளங்கிக் கொள்ள முடியும். சில இடங்களில் ஒருவர் அந்நிய பாஷை பேசுவார். இன்னொருவர் அதற்கு வியாக்கியானம் பண்ணுவார். அந்த வரம் அவர்களுக்குள் கிரியை செய்யும்.

# ௩. வல்லமையின் வரங்கள்!

**விசுவாசம்!**
**குணமாக்கும் வரங்கள்!**
**அற்புதங்களைச் செய்யும் சக்தி!**

இந்த மூன்று வரங்களும் வல்லமைகளை வெளிப்படுத்தக் கூடிய வரங்கள். கர்த்தருடைய வல்லமையை யாரெல்லாம் வெளிப்படுத்த விரும்புகிறீர்களோ, இந்த வல்லமையின் வரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இந்த மூன்று வரங்களும் இணைந்து செயல்படும். ஏனென்றால், விசுவாசம் இல்லாமல் அற்புதங்களைச் செய்ய முடியாது. சாதாரண விசுவாசம் வேறு. விசுவாச வரம் வேறு. இந்த வரம் கிரியை செய்து விட்டால், சிங்கத்தைப்போல் ஒரு பலம் வந்து விடும். கூட்டத்தில் நீங்கள் பிரசங்கம் பண்ணுகிறீர்கள், வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறீர்கள் என்றால், கொஞ்சமும் உங்களுக்கு சந்தேகம் இருக்காது. அந்த விசுவாசம் அப்படி உங்களுக்குள் எழும்பும்.

அந்த வரம், இயற்கைக்கு மேற்பட்ட விதங்களில் ஆவியானவர் கொடுக்கிற வரம். அந்தச் சமயத்தில்தான் பலத்த அற்புதங்கள் நடக்கும். பொதுவான விசுவாசம் எல்லாருக்கும் இருக்கும். ஆனால் விசுவாச வரம் வரும்போது, நீங்கள் வித்தியாசமாக மாறி விடுவீர்கள். அங்கு நடக்கிற அற்புதங்கள் எல்லோரையும் அசைத்து விடும்.

**“இயேசுதான் மெய்யான ஆண்டவர்!”** என்பதை நீங்கள் ஆணித்தரமாக நிரூபித்து விடுவீர்கள். அதற்குத்தான் இந்த ஆழமான ஆவிக்குரிய அனுபவத்திற்குள் உங்களைக் கர்த்தர் நடத்துகிறார். **நீங்கள் யாரும் சாதாரண ஒரு விசுவாசியாக இருக்கக் கூடாது.** நீங்கள் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாக மாற வேண்டும். இயேசுவை வெளிப்படுத்துகிறவர்களாக மாற வேண்டும்.

**“...நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த**

**ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,...உபதேசம் பண்ணுங்கள்.” (மத்தேயு 28:19, 20)** என்று, இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

“நீங்கள் சகல ஜனங்களையும் சீஷராக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்.” என்று கர்த்தர் சொல்கிறார். நீங்கள் ஞானஸ்நானம் எடுத்தால், அவருக்கு சீஷராக மாறித்தான் ஆக வேண்டும். இயேசுவை அறிவித்தே ஆக வேண்டும். அதாவது, அவருடைய வல்லமையைக் குறித்து மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

“நான் ஜெபித்தால், அற்புதம் நடக்கும்.” என்று, அடுத்தவர்களுடைய காரியங்களை அறிந்து ஜெபிக்க வேண்டும். நீங்கள் ஜெபித்து, இந்த வரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த 9 வரங்களில், சிலருக்குள் குறிப்பிட்ட ஒரு வரம் ஓங்கிச் செயல்படும். அந்த குறிப்பிட்ட வரத்தின் மூலமாக நீங்கள் இயேசுவை மகிமைப்படுத்தலாம்.

உங்களுக்குள் ஓங்கிச் செயல்படும் வரத்தைக் குறித்து நீங்கள் தெளிவாக அறிந்து கொண்டு, செயல்படுங்கள். அதற்காக நீங்கள் அதிகமாக ஜெபம் பண்ணுங்கள். கர்த்தருடைய வசனத்தை வாசித்து, அதைக் குறித்ததான என்னென்ன காரியங்களெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, அதில் தேறியவர்களாக மாற வேண்டும். அந்த ஆழமான அனுபவத்திற்குள் நீங்கள் கடந்து போக வேண்டும். இன்றைக்கு, கர்த்தர் உங்களுக்கு வரங்களைக் கொடுக்க வாஞ்சை உள்ளவராக இருக்கிறார்.

**“...நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.” 2 தீமோ. 1:6.**

கர்த்தர் உங்களுக்கு என்ன வரத்தைக் கொடுத்திருக்கிறார்? அதை உங்கள் மூலமாக எப்படிச் செயல்படுத்துகிறார்? என்பதைக் குறித்து, நீங்கள் ஜெபம்

செய்து, அந்த வரத்தை அனல் மூட்டி எழுப்பி, கர்த்தருக்கென்று வல்லமையான சாட்சியாக நீங்கள் எழும்ப வேண்டும்.

# கர்த்தரோடு நெருக்கமாக இருங்கள்!

எப்பொழுதும் கர்த்தரோடு நெருங்கி ஜீவிக்கிற ஒரு அனுபவத்திற்குள் தேவப் பிள்ளைகளாகிய நாம் வர வேண்டும். கர்த்தர் நம்மோடு நடக்க விரும்புகிறார்! நம்மோடு பேச விரும்புகிறார்! நம்முடைய சத்தத்தை அவர் கேட்க விரும்புகிறார்! நாமும் கர்த்தரோடு நடக்கிற அனுபவத்திற்குள் நாம் கடந்து வர வேண்டும். இதற்கு, ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம் போன்ற வரங்கள் உதவி செய்கின்றன. இந்த வரங்களெல்லாம் கர்த்தரோடு நெருங்கி நடக்க நமக்கு உதவி செய்யும். தேவத் திட்டத்தை அறிந்து கொள்ள, ஆவிக்குரிய சூழ்நிலைகளை அறிந்து கொள்ள இந்த வரங்கள் நமக்கு உதவி செய்யும். ஆனால் உங்களுடைய இருதயத்தில், “நான் இயேசுவோடு இருக்க வேண்டும். அவரோடுகூட நடக்க வேண்டும்.” என்கிற ஒரு வாஞ்சை இருக்க வேண்டும்.

**“பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள்** (ஆதாமும், ஏவாளும்) **கேட்டார்கள்.” (ஆதி. 3:8)** என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

அப்படியானால், கர்த்தராகிய தேவன் எந்த அளவுக்கு ஆதாமோடும், ஏவாளோடும் நெருக்கமாக இருந்தார் என்பதை இந்த வேத வசனத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். கர்த்தர், ஒரு தகப்பனைப்போல, தன் பிள்ளைகளாகிய அவர்களோடு பேச வாஞ்சையோடு கடந்து வந்து உறவாடினார். அவர்களும் கர்த்தரோடு

உலாவினார்கள். அவர்கள் இருவரும் கர்த்தரோடு ஒரு அருமையான ஐக்கியம் வைத்திருந்தார்கள். கர்த்தர் மனிதனை உண்டாக்கியதற்கான நோக்கமும், மனிதனைக் குறித்த தேவனுடைய திட்டமும் இதுதான்.

கர்த்தரால், அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட, அவருடைய பிள்ளைகளாகிய நாமும்கூட அவரோடு பேசவும், பழகவும் வேண்டும். அவரும் நம்மோடு பேசவும், பழகவும் வேண்டும். அதற்கு நாம் தகுதிப்பட வேண்டும். நம்முடைய உள்ளத்தில் உள்ளதை அவரிடத்தில் சொல்ல வேண்டும். அவரும் நம்மோடு உறவாட வேண்டும். இதுதான் நம் கர்த்தருடைய விருப்பம்! அதற்குத்தான் கர்த்தர் நம்மை சிருஷ்டித்திருக்கிறார். இந்தக் கிருபையை நம்முடைய முற்பிதாவாகிய ஆதாம் இழந்து போனார்.

பரிசுத்த வேதாகமத்தை நீங்கள் நன்றாக வாசித்துப் பார்த்தால், சில பரிசுத்தவான்கள் இப்படிப்பட்டதான ஒரு உன்னத அனுபவத்திற்குள் இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஒரு **மோசே**, ஒரு **ஏனோக்கு**, ஒரு **நோவா**, ஒரு **ஆபிரகாம்**...என்று, குறிப்பிட்ட ஒரு சில பரிசுத்தவான்கள்தான் இருந்தார்கள்.

ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இயேசு கிறிஸ்து மரித்து, தேவாலயத்தின் திரைச் சீலையைக் கிழித்து, நமக்கும், கர்த்தருக்கும் இடையேயான ஒரு உன்னதமான நெருக்கமான பந்தத்தை உண்டாக்கி விட்டார்!

ஆகவே, நாமும்கூட இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அதைப் பெற்றுக் கொள்ள, முதலாவது நாம் வாஞ்சிக்கவும் வேண்டும். 'தேவனோடுகூட நடப்பது.' என்றால், நாம் கர்த்தரோடு பேசுவது மாத்திரமல்ல, அவரும் நம்மோடு பேச வேண்டும்.

பொதுவாக, நாம் போய் ஜெபத்தில் முழங்கால்படியிட்டு, அவரிடத்தில் பேசி விட்டு வந்து விடுகிறோம். அப்படியல்ல. கர்த்தர் பேசுவதையும் நாம் கேட்க வேண்டும். நீங்கள் மாத்திரம் ஜெபம் செய்து விட்டு,

"சரி, கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார்." என்று சொல்லிக் கொண்டு, ஜெபத்திலிருந்து எழுந்து வந்து விடுவதல்ல.

அவருடைய சமூகத்தில் போய், "ஆண்டவரே, என் ஜெபத்திற்கு என்ன பதில் தருகிறீர்? இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? எனக்குக் கற்றுத் தாரும்." என்று சொல்லி, அவருடைய பதிலுக்காகக் காத்திருக்கும்போது, அவர் உங்களுக்குக் கற்றுத் தருவார்.

மாறாக நாம் என்ன செய்கிறோமென்றால், ஒருவரோடு நீங்கள் தொலைபேசியில் பேசும்போது, 'கட...கட..கட'வென்று, எல்லாவற்றையும் அவரிடத்தில் சொல்லி விட்டு, பதிலுக்கு அவரைப் பேச விடாமல் போனை வைத்து விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களிடத்தில் என்ன பேசியிருப்பார் என்பது உங்களுக்குத் தெரியாது. காரணம். அவரை நீங்கள் பேசவே விடவில்லை.

அதே போலத்தான் நாமும் 'கட...கட..கட...'வென்று சில நிமிட நேரங்கள் ஜெபித்து விட்டு, கர்த்தர் நம்மோடு பேசுவதற்கு, நாம் அவருக்கு இடம் கொடுக்காமல், கடைசியில், 'ஆமென்' என்று சொல்லி விட்டு வந்து விடுகிறோம். கர்த்தரும், "சரி, அவர்கள் பேசுவதை நான் கேட்டேன். ஆனால், நான் பேசுவதைக் கேட்க அவர்களுக்கு விருப்பமில்லை போலும்." என்று எண்ணி, துக்கத்தோடு சென்று விடுவார்.

"ஏனோக்கு, முந்நூறு வருடங்கள் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தான்." **(ஆதி. 5:22)** என்று, பரிசுத்த வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம்.

பழைய ஏற்பாட்டில், தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கைக் குறித்து கொஞ்சம்தான் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், புதிய ஏற்பாட்டில் அவரைக் குறித்து வாசிக்கும்போது, இயேசுவினுடைய இரண்டாம் வருகையைக் குறித்து ஏனோக்கு தீர்க்கதரிசனம் உரைத்தாராம்! "ஏனோக்கு வாழ்ந்தது எந்தக் காலம்?" என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

ஆனால், "ஏனோக்கு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்!" என்றால், 'சுமார் 300 வருடங்கள் தேவனோடு அவர் சஞ்சரித்தார்!' அப்படியானால், "தேவனும், ஏனோக்கும் அப்படி என்னதான் பேசியிருப்பார்கள்?" என்று சற்று யோசித்துப் பார்த்தால், "கர்த்தர் தேவ இரகசியங்களை எல்லாம் மனம் திறந்து ஏனோக்கிடம் சொல்லியிருந்திருப்பார்!" என்றே நினைக்கத் தோணுகிறது.

ஒருவேளை, "ஆபிரகாமை நான் தெரிந்து கொள்ளப் போகிறேன். அவன் மூலமாக நான் பூமியிலே அவனுடைய சந்ததியைப் பெருகப் பண்ணப் போகிறேன். அவர்களுக்கு நான் பாலும், தேனும் ஓடுகிற ஒரு தேசத்தைக் கொடுக்கப் போகிறேன். அதிலிருந்து யூதா கோத்திரத்தில் ஒரு மனுஷ குமாரன் அவதரிக்கப் போகிறார். உலகத்தின் மீட்பிற்காக அவர் சிலுவையில் மரிக்கப் போகிறார். மரித்த மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு ஏறிச் செல்லப் போகிறார். அதன் பிறகு, கடைசிக் காலத்தில் மறுபடியும் ஆயிரமாயிரம் தூதர்களோடு அவர் மறுபடியும் பூலோகத்திற்கு வரப் போகிறார்..." என்றெல்லாம், அனேக தேவ இரகசியங்களைக் குறித்து இரகசியம் பேசியிருக்கலாம்! அவ்வளவு நெருக்கமான ஒரு **Friendship!**

ஏனோக்கைப் போல நீங்களும் கர்த்தரோடு நெருங்கிப் பழகி விடுங்கள். அப்பொழுது அவர், தன் இருதயத்தில் உள்ளவைகளை உங்களோடும் பகிர்ந்து கொள்வார்.

ஏனோக்கைப்போல நாமும் கர்த்தரோடு பழக வேண்டும். அவரோடு நடக்க வேண்டும். "அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று சற்று யோசியுங்கள். அதற்காக ஜெபியுங்கள்.

"ஏனோக்கு எப்படியெல்லாம் நடந்திருப்பார்? எப்படியெல்லாம் கர்த்தர் அவரோடு பேசியிருப்பார்?" என்று வேத வசனத்தின் வெளிச்சத்தில் தியானித்துப் பாருங்கள்.

**"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார்." (ஆதி. 5:24).**

கர்த்தர் ஏனோக்கைப் பார்த்து, "நீ என் இருதயத்தைப் புரிந்து கொண்ட மனிதன், என்னோடு பரலோகத்திற்கு வா." என்று சொல்லி, அவனைக் கூட்டிக் கொண்டு போய், தன்னோடுகூட பரலோகத்தில் வைத்துக் கொண்டார். இப்படித்தான் ஏனோக்கு காணப்படாமல் போனார்.

கர்த்தரோடு எப்பொழுதும் நடக்க வேண்டுமென்றால், "கர்த்தருடைய ஊழியக்காரர்களாக, அல்லது தீர்க்கதரிசிகளாக இருக்க வேண்டும்!" என்று அல்ல.

**"ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்." ஆதி. 5:22.**

ஏனோக்கு ஒரு குடும்பஸ்தன்! அந்த நிலைமையிலும் அவர் கர்த்தரோடு சஞ்சரித்தார்!

**"நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்." ஆதி 6:9.**

**நோவா**வும் குடும்பத்தோடு வாழ்ந்தவர். தன் மனைவி, பிள்ளைகளுக்காக நிலத்தில் உழைத்த ஒரு மனிதன். அவரும் கர்த்தரோடு சஞ்சரித்தார்.

**"தேவன் ஆபிரகாமோடே பேசிமுடிந்தபின்பு, அவர் அவனைவிட்டு எழுந்தருளினார்." ஆதி. 17:22.**

"கர்த்தராகிய தேவன், ஆபிரகாமிடத்தில் பேசி முடித்த பின்பு, எழுந்தருளிப் போனார்." என்றால், என்ன அர்த்தம்? கர்த்தர் பரலோகத்தை விட்டு இறங்கி வந்து, ஆபிரகாமுக்கு முன்பாக வந்து நின்று பேசினார். இரண்டு பேரும் சம்பாஷித்தார்கள். பேசி முடித்த பின்பு, "நான் போய்விட்டு வருகிறேன்." என்று சொல்லி விட்டு கர்த்தர் போனார். எவ்வளவு அற்புதமான ஒரு அனுபவம்!

ஆபிரகாம், கர்த்தரோடு எவ்வளவு நெருக்கமாக வாழ்ந்திருக்கிறார், பாருங்கள்!

“பழைய ஏற்பாட்டுக் காலத்து ஆபிரகாமுக்கே அப்படிப்பட்ட ஒரு அனுபவம்!’ என்றால், “புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்கிற நமக்கு எவ்வளவு சிறப்பான அனுபவத்தைக் கர்த்தர் வைத்திருக்கிறார்!” என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

நாம் என்றைக்கு இப்படிப்பட்ட ஒரு அனுபவத்திற்குள் வரப் போகிறோம்? இதற்காக நீங்கள் தனியாக அறையில் போய் ஜெபியுங்கள். இந்த அனுபவத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். காரணம், நீங்களும் இப்படிப்பட்ட ஒரு அனுபவத்திற்குள் வர வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். நீங்கள் ஜெபிக்கும்போது, கர்த்தர் உங்களிடம் பேச வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும். நீங்கள் கர்த்தரை நெருங்கி நெருங்கி வந்து, அவரோடு பழகி விட்டால், மிகவும் சுலபமாக விடும்.

ஏனென்றால், கர்த்தரோடு நெருங்க நெருங்க, ‘அவர் எப்படிப்பட்டவர்?’ என்று உங்களுக்குத் தானாகத் தெரிந்து விடும். அவரை நெருங்க வேண்டுமானால், “நாம் எந்த அளவிற்குப் பரிசுத்தமாக இருக்க வேண்டும்? எதை எதையெல்லாம் நாம் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும்?” என்பதை உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். ஆரம்பத்தில் மணிக்கணக்காக தேவ சமூகத்தில் காத்திருந்த நீங்கள், கர்த்தரோடு எப்போதும் நெருங்கி இருக்கப் பழகி விட்டால், முழங்கால்படியிட்ட கொஞ்ச நேரத்தில் அவர் உங்களோடு பேசி விடுவார்.

இந்தப் பழக்கத்திற்குள் நீங்கள் வந்து விட்டால், நீங்கள் மாறி விடுவீர்கள். கர்த்தர் உங்களை வித்தியாசமாக மாற்றி விடுவார். “நீங்கள் கர்த்தரோடு நடக்கிறீர்கள்!” என்பதை, உங்கள் வீட்டில் உள்ளவர்கள் சொல்லாமலேயே, உங்களை அறிந்து கொள்வார்கள். உங்கள் வீட்டில் நடக்கப் போகும் காரியத்தைக் குறித்து முன்பதாகவே சொல்வீர்கள்.

நன்றாக ஜெபிக்கிற ஒரு தேவ மனிதரை எனக்குத் தெரியும். அவருடைய ஒரு வாலிப மகள் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தாள். அவரும் தன் மகளை பக்தியோடு வளர்த்தார். ஒருநாள் அவர் ஜெபித்து கொண்டிருந்தபோது, அவருடைய மகள், அன்றைக்கு விரும்பத் தகாத ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்த ஒரு காட்சியை கர்த்தர் அவருக்குக் காண்பித்தார். அவள் வீட்டிற்கு வந்தவுடன், தன் மகளை அவர் அன்பாகக் கூப்பிட்டு, எல்லாம் விசாரித்து விட்டு, ''சரி, ஏன் நீ இந்த இடத்திற்குச் சென்றாய்? அங்கு உனக்கு என்ன வேலை?'' என்று கேட்டார். அவர் அப்படிக் கேட்டவுடன், அவள் அதிர்ந்து போய் விட்டாள்!

''அப்பா, நீங்கள் அங்கு வந்தீர்களா?'' என்று கேட்டாள். ''நான் வரவில்லை. பரிசுத்த ஆவியானவர் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எனக்குள்ளிருக்கும் அந்த ஆவியானவர், நீ எங்கே நின்று கொண்டிருந்தாய் என்பதை எனக்குக் காண்பித்து, உனக்காக ஜெபிக்க வைத்தார். அது ஆபத்தான இடம். இனிமேல் நீ அங்கு போகக் கூடாது'' என்று சொன்னார்.

''என்னை மன்னித்து விடுங்கள், அப்பா. நான் உங்களிடம் சொல்லாமல் போய் விட்டேன். இனி நான் அப்படிப் போக மாட்டேன்.'' என்றாள். இனி ஒருபோதும் அவள் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய மாட்டாள், அல்லவா? ஏனென்றால், ''நான் எங்கு போனாலும், என்ன செய்தாலும், பரிசுத்த ஆவியானவர் மூலம் அப்பாவிற்குத் தெரிந்து விடும்.'' என்று அவளுக்குத் தெரியும். இப்படிப்பட்ட, பரிசுத்த ஆவியானவரோடுகூட ஐக்கியப்படுகிற அனுபவம் ஒவ்வொரு பெற்றோருக்கும் இருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையில் ஒரு சின்னக் காரியமானாலும், அதை உதாசீனம் பண்ணாமல், அதன் காரியமாக உங்களோடு பேச வேண்டிய அவசியம்

இருந்தால், உங்களோடு பேசி, உங்களை வழி நடத்துவார். இந்த அளவிற்கு நீங்கள் ஆவியானவரோடு நெருங்கி வாழ வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு போதகருடைய துணைவியார், இப்படியாகத் தன் அனுபவத்தைச் சொன்னார்கள். அவர்கள் தினமும் அதிகாலையில் எழும்பி, அந்நிய பாஷை பேசி ஜெபம் செய்வார்கள்.

ஒருநாள், அவர்களுடைய பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அன்றைக்கு, பள்ளிக்கூடம் விடுமுறை. அந்த சகோதரி சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஆவியானவர், ‘மகளே...’ என்று அந்தச் சகோதரியைக் கூப்பிட்டார்.

அவர்கள் வேலையை அப்படியே நிறுத்தி விட்டு, ‘ஆண்டவரே...’ என்றார்கள். அப்பொழுது ஆவியானவர், அந்தச் சகோதரியினுடைய ஒரு மகனுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லி, அவனை உடனே தேடு, போய் பார்.’’ என்று சொன்னார்.

உடனே, அந்த சகோதரி மிகுந்த பதட்டத்தோடுகூட வீட்டின் முன்பாக விளையாடிக் கொண்டிருந்த தன் மகனைப் பார்த்தால், காணவில்லை. ‘எங்கே போயிருப்பான்?’ என்று தேடிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, தூரத்தில் ஒரு கிணற்றைச் சுற்றி சின்னப் பிள்ளைகள் கூடி நின்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

‘என்ன நடந்தது?’ என்று விசாரித்து விட்டு, கிணற்றுக்குள் பார்த்தால், அந்த சகோதரியினுடைய மகன் கிணற்றுக்குள் தவறி விழுந்து, அவனுக்கு நீச்சல் தெரியாததினால் தண்ணீருக்குள் மூழ்கிக் கொண்டிருந்தான். கடைசி நிமிடம் ஓடிப் போய் அவனைத் தூக்கினார்கள். 2 நிமிடம் தாமதித்திருந்தால்கூட அவன் இறந்து போயிருப்பான்.

தன் மகனுக்குப் பெரிய ஆபத்து என்பது, அந்த தாய்க்குத் தெரியவில்லை. ஆனால், கர்த்தருக்குத் தெரிந்து விட்டது. காரணம், இந்த பூமியில் கர்த்தருடைய கண்களுக்கு மறைவானது எதுவுமே இல்லையே!

அந்தச் சகோதரி எப்போதும் கர்த்தரோடு பேசுகிற அனுபவத்தோடு இருந்ததினால், உடனே கர்த்தர் அவர்களோடு பேசினார்.

இப்படியாக, அனேக சமயங்களில் கர்த்தர் நம்மோடு பேச வருகிறார், பேச விரும்புகிறார். ஆனால், நாம்தான் அவர் நம்மோடுகூடப் பேசுவதற்கு இடம் கொடுப்பதில்லை. நாம் அவருடைய சத்தத்தைக் கவனிப்பதில்லை. காரணம், அந்த அனுபவத்திற்குள் நாம் இன்னும் கடந்து வரவில்லை.

நம்முடைய இருதயத்தை அதற்காக நாம் சரிப்படுத்தவில்லை. அதனால்தான், “எனக்கு இப்படிப்பட்ட அனுபவம் இல்லை.” என்று சொல்லிக் கொண்டு, நாம் இப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர் பட்சபாதமுள்ள தேவனல்ல. எல்லோரோடும் அவர் பேச, பழக விரும்புகிறார். “ஆபிரகாம் தேவனுடைய சினேகிதன்!” எனப்பட்டார். **(யாக். 2:23).**

நீங்களும் கர்த்தருடைய சினேகிதராக மாறி விடுங்கள். “ஆண்டவரே, நீர்தான் என்னுடைய நெருங்கி நண்பன்.” என்று சொல்லுங்கள். இரண்டு பேர் நெருங்கிய நண்பர்களாக இருந்தால், ஒருநாளில், ஒரு தடவையாவது எப்படியாவது பார்த்துப் பேசிக் கொள்வார்கள். அதேபோல கர்த்தரோடு நெருங்கி இருங்கள். தினமும் அவருடைய சினேகிதனாக இருந்து விட்டால், உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையே மாறி விடும்.

‘சினேகிதர்கள்’ என்றால், ‘நடு இரவு நேரம்’ என்றாலும், ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வார்கள். ஆனால், “கர்த்தரிடம் மட்டும் பேசுவதற்கு நேரமில்லை...”

என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், கர்த்தரைத் தங்களுக்குச் சினேகிதர்களாக வைத்திருப்பார்களா?

“எவ்வளவு நேரமானாலும் என் கர்த்தரோடு நான் பேச வேண்டும். என் கர்த்தருடைய பாதத்தில் நான் அமர்ந்திருக்க வேண்டும்.” என்கிற ஒரு தாகத்தோடு அவரைத் தேடிக் காத்திருக்கிறவர்கள்தான், அவரோடு சினேகிதர்களாக இருக்க முடியும். நீங்கள் விலைக் கிரையம் கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுக்க ஆயத்தமா? நீங்கள், உங்களுடைய நேரத்தை, உங்களுடைய முழங்கால்களைக் கொடுக்க வேண்டும். அவருடைய பாதத்தில் நீங்கள் அமர்ந்திருக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் உங்களோடு பேசுவார்.

**“ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்;...” யாத். 33:11.**

ஒருவன் தீர்க்கதரிசியாக இருந்தால், சொப்பனத்தின் மூலமாகவோ, அல்லது தீர்க்கதரிசனத்தின் மூலமாகவோ அவனோடு கர்த்தர் பேசுவார். நீங்கள் இடைவிடாமல் ஜெபிக்கிறவர்களாக, எப்பொழுதும் கர்த்தரோடு நெருங்கி வாழ்கிறவர்களாக இருந்தால், சொப்பனங்கள் மூலமாகவோ, அல்லது தரிசனங்கள் மூலமாகவோ கர்த்தர் உங்களோடு பேசுவார். சிலருக்கு பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கர்த்தர் அவர்களுடைய ஆவியில் அதிக நேரம் பேசுவார். இதுதான் தேவ சத்தத்தைக் கேட்பது!

சில சமயங்களில், ஒரு சிலரோடு காதுக்கருகில் பேசுவதுபோலப் பேசுவார். அந்த சத்தம் எல்லோருக்கும் அல்ல, எல்லா நாட்களுமல்ல. சில சமயங்களில் சிலருக்கு காதில் கேட்கும்படியாகப் பேசுவார்.

பெரும்பாலும் கர்த்தர் பரிசுத்த ஆவியானவர் மூலமாக நம்முடைய ஆவியிலே பேசுவார். நாம் பரிசுத்த ஆவியில் ஆவிக்குள் முழுமையாக நிரம்பி ஜெபிக்கும்போது, கர்த்தருடைய சத்தத்தை நம்மால்

தெளிவாகக் கேட்க முடியும். சில சமயம் தேவனுடைய சாயலைக்கூட உங்களால் பார்க்க முடியும்!

நீங்கள் பரிசுத்த ஆவிக்குள் நிறைந்து விட்டால், அவருடைய சாயலைப் பார்க்கலாம்! அவருடைய சத்தத்தை நீங்கள் கேட்கலாம்! அவர் உங்கள் அருகில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம்! அப்படிப்பட்டதான அனுபவத்திற்குள் கர்த்தர் உங்களை நடத்துவார். வாஞ்சையோடு கர்த்தரைத் தேடித் தேடி, இப்படிப்பட்டதான ஒரு ஆழமான அனுபவத்திற்குள் நீங்கள் கடந்து போக வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் மாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அப். **பேதுரு**வின் வாழ்க்கையில்கூட இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தைப் பார்க்கலாம்.

**“பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்.**

**நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார்.” அப். 10:19,20.**

பாருங்கள், பேதுரு ஒரு சொப்பனத்தைப் பார்த்தார். அதைக் குறித்து அவர் யோசித்துக் கொண்டிருந்தபோது, ஆவியானவர் அவரோடு பேசினார். இங்கே ஆவியானவர் தரிசனத்தில் பேதுருவோடு பேசியதைப் பார்க்கிறோம். முதலாவது தரிசனம்! அதன் பிறகு கர்த்தருடைய வார்த்தை பேதுருவுக்கு வெளிப்பட்டது.

**“பேதுரு...முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.” அப். 9:40.**

பேதுரு, மரித்துப் போயிருந்த தொற்காளுக்காக ஜெபித்தபோது, அவர் ஜெபம் பண்ணி, அந்தப் பிரேதத்திற்கு முன்பாகத் திரும்பி, எழுந்திருக்கச் சொன்னார். 'ஜெபம் பண்ணினார்...' என்றால், என்ன அர்த்தம்?

'பேதுரு கர்த்தரோடு பேசினார்!' என்றுதானே அர்த்தம்! பேதுரு கர்த்தரிடத்தில் ஜெபித்தபோது, "அந்தப் பிணத்தோடு பேசு, நான் எழுப்பி விடுகிறேன்." என்று கர்த்தர் சொல்லியிருப்பார். அந்த நேரத்தில் செய்ய வேண்டிய காரியத்தை, கர்த்தரிடத்தில் கேட்டுத்தான் பேதுரு செய்திருக்க வேண்டும்! அப்படிப்பட்டதான, கர்த்தரோடு கூடிய ஒரு நெருக்கமான அனுபவம் பேதுருவுக்கு இருந்தது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

அப். **பவுல்,** தன் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறித்து எழுதும்போது, "**நான்...ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞான திருஷ்டியடைந்து, அவரைத்** –இயேசுவை– **தரிசித்தேன். அவர் என்னை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்." (அப். 22:17,18)** என்று இயேசு **தரிசனத்தில் தனக்குத் தோன்றி**, தன்னிடத்தில் இப்படிப் பேசியதாக எழுதுகிறார்.

இங்கே அப். பவுல் ஜெபித்தபோது, கர்த்தர் அவருக்குத் தரிசனமாகி, அவரை அழகாக வழி நடத்தியதைப் பார்க்கிறோம்.

மாத்திரமல்ல, பவுல் பிரயாணப்பட்டுப் போய் கொண்டிருந்த கப்பல் கடலுக்குள் ஒரு ஆபத்தான சூழ்நிலையில் சிக்கிக் கொண்டிருந்தபோது, ஒரு தேவ தூதனை கர்த்தர் பவுலினிடத்தில் அனுப்பியதாகவும், அந்த தூதனானவர் பவுலுக்கு தரிசனத்தின் தோன்றி,

"நீ பயப்படாதே, இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். நீ இதில் மரிக்க மாட்டாய். உன் நிமித்தம் உன்னோடுகூட வருகிற எல்லோருக்கும் நான் பாதுகாப்பைப் கொடுப்பேன்." என்று தரிசனத்தில் தோன்றி, சொல்லச் சொன்னதாக வேதாகமத்தில் வாசிக்கிறோம்.
**(அப். 27:23-25).**

மாத்திரமல்ல, பவுலுடைய ஊழியத்தின் பாதையிலும் கர்த்தருடைய ஆவியானவர் அவரை எப்படியெல்லாம் வழி நடத்தினார் என்பதைக் குறித்தும் நாம் வேதாகமத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.
**(அப். 16:6-9).**

**கர்த்தருக்கும், பவுலுக்கும் இடையே எவ்வளவு அற்புதமான, அருமையான ஒரு தொடர்பு இருந்து கொண்டேயிருந்தது** என்று பாருங்கள்!

ஊழியத்தில் மாத்திரமல்ல, நம்முடைய குடும்ப வாழ்க்கையிலும் கர்த்தர் நம்மோடு இடைபட்டுப் பேசுவார். நம்முடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் கர்த்தர் நம்மோடு இடைபட்டு, அழகாகப் பேசி, நம்மை சரியாக வழி நடத்துவார்.

எனக்கு ஒரு பழக்கம் உண்டு. அதாவது, நான் சந்தோஷப்பட்டால், அதைக் கர்த்தரிடத்தில் சொல்லி சந்தோஷப்படுவேன். வருத்தமான நேரத்திலும்கூட, "ஆண்டவரே, இது எனக்கு வருத்தமாக இருக்கிறது." என்று அதையும்கூட அவரிடத்தில் பகிர்ந்து கொள்வேன்.

சில சமயங்களில் பிரச்சனைகளைக் கர்த்தரிடத்தில் கொண்டு போகும்போது, அவர் அழகாக நம்மோடு பேசி, நம்மை சரியாக வழி நடத்துவார். காரணம், அவர் நம்முடைய சினேகிதன்! நம்முடைய தகப்பன்! நாம் மனம் திறந்து அவரோடு பேசப் பழக வேண்டும்.

எல்லாவற்றையும் நீங்கள் அவரிடத்தில் சொன்னால் சந்தோஷப்படுவார். கர்த்தரோடுகூட

இப்படிப்பட்டதான பழக்கத்திற்குள் வந்து விட்டால், நீங்கள் கர்த்தரோடு நெருங்கி வாழலாம். அவரோடு பழகலாம். அதே சமயத்தில், அவரோடு விளையாட முடியாது. காரணம், அவர் சர்வ வல்லமையுள்ள தேவன்!

# ஆழமான ஜெப வாழ்க்கை!

தேவப் பிள்ளைகளாகிய நம்முடைய ஜெபம், மேலோட்டமான ஒரு ஜெபமாக இருக்கக் கூடாது. ஆழமான ஜெப வாழ்க்கைக்குள்ளாக நாம் கடந்து போக வேண்டும். அப்பொழுதுதான் தேவனுடைய வல்லமையை நம்மால் அறிய முடியும்.

**நீங்கள் ஒவ்வொருவரும் ஆழமான ஒரு ஜெப அனுபவத்திற்குள்ளாக வர வேண்டும்** என்று கர்த்தர் விரும்புகிறார். நீங்கள் படிப்படியாக முன்னேறி, ஆழமான ஒரு ஜெப அனுபவத்திற்குள்ளே வந்து விட்டால், உங்களால் ஜெபிக்காமல் இருக்கவே முடியாது. மணிக்கணக்காக ஜெபித்துக் கொண்டேயிருக்கலாம். அப்படிப்பட்ட ஜெபம் உங்களுக்கு ஒரு இனிமையான அனுபவமாக மாறி விடும். எப்பொழுதும் இடைவிடாமல் ஜெபிக்கிற ஒரு இருதயம் உங்களுக்குள்ளே உண்டாகும்.

அந்த ஜெபத்தின் பலனை உடனே நீங்கள் பார்க்கலாம். இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை! இயேசுவோடுகூட நடந்து அவரோடு சேர்ந்து ஜெபிப்பதென்பது, ஒரு மகிமையான வாழ்க்கை! இந்த அனுபவம் ஊழியக்காரர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசிக்கும் அப்படிப்பட்ட ஒரு அனுபவத்தைக் கொடுக்க, கர்த்தர் விரும்புகிறார்.

சின்னப் பிள்ளைகளுக்குக்கூட அந்த அனுபவத்தைக் கொடுக்கக் கர்த்தர் விரும்புகிறார். முதலாவதாக, இதை விசுவாசிக்க வேண்டும். **ஜெப வாழ்க்கையிலே நீங்கள் அதிகமாக வளர வேண்டும்.** அதற்கு நீங்கள் இயேசுவைக் கவனித்துப் பார்க்க வேண்டும். எந்தவொரு காரியமானாலும் **உங்கள் கண்கள் இயேசுவின் மீதுதான் பதிந்திருக்க வேண்டும்.** எந்த ஊழியக்காரர் என்ன சொன்னாலும், அவை எல்லாவற்றிற்கும் மேலாக, 'இயேசு என்ன சொல்கிறார்?' என்று பாருங்கள்.

அவருடைய முகத்தை நோக்கிப் பாருங்கள். வேதாகமத்தில் எல்லாவற்றிற்கும் பதில் இருக்கிறது. இந்தக் காரியத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கலாம்! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நம்பிக்கை இருக்கலாம்! யார் என்ன சொன்னாலும், 'இயேசு என்ன சொல்கிறார்?' என்றுதான் பார்க்க வேண்டும். உங்களுடைய கண்கள் எப்பொழுதும், எந்தக் காரியத்திற்கும் இயேசுவின் மேல் பதிந்திருந்தால், நீங்கள் வலது புறம், இடது புறம் விலகாதபடி உங்களால் எல்லாச் சூழ்நிலைகளிலும் சரியாக நடக்க முடியும்.

'நம்முடைய ஜெப வாழ்க்கைக்கு மாதிரி யார்?' என்றால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு மாத்திரமே! அவர்தான் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

**"அவர்** –இயேசு– **அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்." மாற்கு 1:35.**

அப்படியானால், இயேசுவைப்போல நாமும் அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஜெபிக்க வேண்டும். கர்த்தரோடு தனித்திருக்க வேண்டும்.

**"அவர்** –இயேசு– **ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்." மத்தேயு 14:23.**

சாயங்காலத்தில் கூட இயேசு ஜெபம் பண்ணினார். அப்படியானால், சாயங்காலத்திலும் ஒருமணி நேரமாவது நாம் ஜெபிக்க வேண்டும்.

**“அந்நாட்களிலே, அவர்** – இயேசு – **ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்.” லூக்கா 6:12.**

இதை நாம் மறந்து விடக் கூடாது. மாத்திரமல்ல,

**“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்;” மத்தேயு 26:41.**

**“எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்...” (லூக்கா 21:36)** என்று இயேசு சொல்கிறார்.

காரணம், கடைசிக் காலத்திலே கர்த்தருடைய வருகையிலே நாம் நிலைத்திருக்க வேண்டும். ஆகவே எப்பொழுதும், நம்முடைய ஜெப ஆவியை நாம் காத்துக் கொள்ள வேண்டும்.

பயணம் செய்யும்போதும்கூட ஜெபிக்க வேண்டும். வேலை செய்கிறபோதும் ஜெபிக்க வேண்டும். இதனுடைய அர்த்தமென்ன? **நாம் 24 மணி நேரமும் நம் ஆண்டவராகிய இயேசுவோடு பேசிக் கொண்டேயிருக்க வேண்டும்.** அதாவது, உங்களுடைய ஆத்துமா இயேசுவோடு எப்போதும் தொடர்பில் இருந்து கொண்டேயிருக்க வேண்டும்.

**“எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்.”** என்பதாக இயேசு சொல்லியிருக்கிறார். **(மத்தேயு 26:41, மாற்கு 14:38).**

இதுதான் இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிற காரியம். அது மாத்திரமல்ல, வேதாகமத்தில் நாம் வாசித்துப் பார்க்கும்போது, ‘நாம் என்னென்ன காரியத்திற்காக ஜெபிக்க வேண்டும்?’ என்றும், அதிகமான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

**"...எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்." 1 தீமோ. 2:1.**

நமக்காக மட்டுமே நாம் ஜெபித்துக் கொண்டிருக்கக் கூடாது. எல்லா மனுஷருக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும்! உங்கள் கிராமத்திலிருக்கிற எல்லோருக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் பட்டணத்திலிருக்கிற எல்லோருக்காகவும் நீங்கள் ஜெபிக்க வேண்டும். அதற்குப் பிறகு மாநிலங்களில் இருக்கிற எல்லோருக்காகவும், இந்தியாவிலிருக்கிற எல்லோருக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

முக்கியமாக அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். முதலமைச்சர்கள், அமைச்சர்கள், பிரதம மந்திரி, ஜனாதிபதி, கட்சித் தலைவர்கள்...என்று, "தேசத்தை ஆள்கிற தலைவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்." என்று வேதாகமம் சொல்கிறது.

**சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். (எபே. 6:18).**

"எல்லா தேவ மனிதர்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும்." என்று வேதாகமம் நமக்குத் தெளிவாகச் சொல்கிறது.

**"திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்." கொலோ. 4:4.**

வேத வசனங்கள் அறிவிக்கப்படவும், அந்த ஊழியத்திற்கான வழிகளைக் கர்த்தர் திறந்து கொடுக்கவும், அந்த ஊழியத்தை நிறைவேற்ற இருக்கிற தேவ ஊழியர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

இப்படியாக, ஜெபத்தைக் குறித்ததான அனேகக் காரியங்களை வேதாகமத்தில் வாசித்து, அறிந்து கொள்ளலாம்.

# காரியங்களை அறிந்து ஜெபிக்க வேண்டும்!

**'நெகேமியா'** என்பவர், எருசலேமிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு அடிமையாக, பாபிலோன் தேசத்து ராஜாவுடைய அரண்மனையிலே ஒரு பான பாத்திரக்காரனாக இருந்தார். அவருடைய சொந்த தேசமான எருசேலேமிலிருந்து அவருடைய உறவினரும், வேறு சில மனிதர்களுமாக எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு வந்தார்கள். நெகேமியா அவர்களைப் பார்த்தவுடன், மிகுந்த ஆவலோடு, "நம்முடைய தேசம் எப்படியிருக்கிறது? நம் நாடு, நம் எருசலேம் பட்டணம் எப்படியிருக்கிறது? அங்குள்ள மக்கள் எப்படியிருக்கிறார்கள்?" என்று விசாரித்தார். அதற்கு அவர்கள், "பட்டணம் சுட்டெரிக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் எல்லோரும் சிறுமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற கொஞ்ச ஜனம்கூட சந்தோஷமாக இல்லை. எல்லோரும் வேதனையில் இருக்கிறார்கள்!" என்று சொன்ன செய்தியை நெகேமியா கேட்டவுடனே,

**"நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, பரலோகத்தின் தேவனை நோக்கி:...பிரார்த்தித்தேன்." (நெகே.1:1-11)** என்று சொல்கிறார்.

தன் மக்களைக் குறித்தும், தன் தேசத்தைக் குறித்தும் விசாரித்த நெகேமியாவிற்குள்ளே தன் தேசத்தைக் குறித்ததான ஒரு பாரம் உண்டாகி, ஜெபம் பண்ணினார். அதேபோல **நாமும் நம் தேசத்தில் நடைபெறும் காரியங்களை அறிந்து, தேவ சமூகத்திலே ஜெபம் செய்ய வேண்டும்.**

தேசத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஊழியங்களைக் குறித்து உங்களுக்குத் தெரியும்.

காரணம், உங்களுக்கு அனுப்படுகிற பத்திரிக்கைகளின் மூலமாக, ஒவ்வொரு ஊழியர்களைக் குறித்தும், அவர்களுடைய ஊழியங்களைக் குறித்தும், நீங்கள் அறிந்து ஜெபிக்கிறீர்கள்.

ஊழியங்களைக் குறித்தும், ஊழியக் காரியங்களைக் குறித்தும் அறிந்து ஜெபிப்பது மட்டும் போதாது. நம்முடைய தேசத்தைக் குறித்தும் நாமே அறிந்து ஜெபிக்க வேண்டும். நெகேமியா தன் தேசத்தை குறித்து அறிந்து ஜெபித்தார்.

நம்முடைய இந்தியா தேசத்தைக் குறித்த அறிவு நமக்கு இருக்க வேண்டும். “எத்தனை மாநிலங்கள் இருக்கிறது? எத்தனை இன மக்கள் இருக்கிறார்கள்? எத்தனை கோடி மக்கள் இருக்கிறார்கள்?” என்று அறிந்து, நாம் தேவ சமூகத்திலே ஜெபிக்க வேண்டும். அவ்வப்போது தேசத்தில் வரக் கூடிய பிரச்சனைகளை அறிந்து நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

ஜெபிக்கிற நாம், நம் தேசத்தில் நடைபெறுகிற காரியங்களை அறிந்து கொள்ளும்போது, நமக்குள் ஒரு பாரம் உண்டாகும். அதற்காக நாம் ஜெபிக்கும்போது, அந்த ஜெபத்திற்குக் கர்த்தர் உடனே பதில் தருவார்.

பல வருடங்களாக அமெரிக்காவில் மூன்று நாட்கள் உபவாச ஜெபத்தை நடத்தி, அந்த தேசத்திற்காக ஜெபித்து வருகிறோம். ஒருமுறை, அங்கே இந்த மூன்று நாட்கள் உபவாச ஜெபம் நடந்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு சகோதரர் ஒரு பத்திரிக்கைச் செய்தியை என்னிடத்தில் கொண்டு வந்து கொடுத்தார். அந்தச் சமயத்தில், திரு. ஜார்ஜ் புஷ் அவர்கள் அமெரிக்க அதிபராக இருந்தார். அவர் ஒரு விசுவாசியாக இருந்தபடியினால், அடிக்கடி, **'God bless America!'** என்று சொல்வார்.

இந்த வார்த்தை சிலருக்குப் பிடிக்கவில்லை. உடனே அவர்கள், **'God less America!'** அதாவது, “கடவுள் இல்லாத அமெரிக்கா!” என்று ஒரு விளம்பரம்

பண்ணி, அதற்காக **Washington D.C.**யிலுள்ள ஒரு பெரிய இடத்தில் சுமார் பத்து லட்சம் பேர் ஒன்று கூடி, "**God less America!**" என்று **Declare** பண்ண வேண்டும். என்று சொல்லி, ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்கள்.

நான் அந்தச் செய்தியைப் பார்த்தவுடனே மிகவும் வருத்தப்பட்டேன். ஆனால், நான் அதை அப்படியே விட்டு விடவில்லை.

உடனே நான், அன்றைக்கு ஜெபிக்க வந்திருந்த எல்லோரிடத்திலும், "இந்த **God less America** கூட்டமே நடக்கக் கூடாது. நாம் எல்லோரும் இதற்காகக் கருத்தாக ஜெபிப்போம்." என்று சொல்லி, ஜெபித்தோம்.

என்ன நடந்தது தெரியுமா? கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, சூழ்நிலையையே தலைகீழாக மாற்றி, அந்தக் கூட்டத்தையே நடைபெறாதபடிக்கு நிறுத்தி விட்டார்! பாருங்கள், நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் செயல்படுகிறார்!

ஆகவே, எந்த ஒரு காரியத்தையும் ஒரு ஜெபக் குறிப்பாக மாற்றி நாமே ஜெபிக்க வேண்டும். பிள்ளைகளுடைய சின்னச் சின்னக் காரியங்களுக்காக ஜெபிப்பதுபோல, தேசத்திற்கான ஒவ்வொரு சின்னக் காரியத்தையும் அறிந்து, ஜெபக் குறிப்பாகச் சொல்லி ஜெபிக்க வேண்டும். எப்பொழுதும் நம்மைச் சுற்றிலும் நடக்கிற காரியங்களைக் குறித்தும், தேசத்தைக் குறித்தும் ஜெபத்தில் விழிப்போடு இருக்க வேண்டும்.

நீங்கள் ஒவ்வொரு சின்னக் காரியத்திற்காகவும் ஜெபித்துப் பாருங்கள். தேவன் எப்படி செயல்படுகிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

சில வருடத்திற்கு முன்பு, ஒரு உபவாச ஜெப முகாமில், டாக்டராக இருக்கிற, சகோ. சாம் ஜெபத்துரை அவர்களுடைய மகளோடு பேசிக் கொண்டிருந்தேன். அவளுடைய வேலைக் காரியங்களைக் குறித்து நான் அவளிடத்தில் கேட்டபோது, அவள் பாரத்தோடு என்னிடத்தில் சொன்ன காரியம் என்னவென்றால்,

“குடிப் பழக்கத்தினால் எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன? எத்தனை குடும்பங்கள் பிரிகின்றன? எத்தனை பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள்? இதெல்லாம் என்னுடைய வேலை நேரங்களில் நான் நேரில் பார்க்கிற காரியங்கள்.” என்று சொன்னாள்.

பாருங்கள், “இப்படியாகக் குடும்பங்களெல்லாம் பாதிக்கப்படுகிறதே!” என்று அவளுக்குள்ளும் ஒரு பாரம் இருந்தது. இதற்கு முன்னால், எத்தனையோ முறை, “குடிகாரர்கள் இரட்சிக்கப்பட வேண்டும்...” என்று ஜெபித்திருக்கிறோம்.

உண்மைதான்! ஆனால், அந்த மகள் என்னோடு பகிர்ந்து கொண்ட காரியத்திற்குப் பிறகு, எனக்குள்ளும் ஒரு பெரிய பாரம் வந்தது.

இது எவ்வளவு முக்கியமான ஒரு காரியம்! அன்றாடம் நம்மைச் சுற்றிலும் நடக்கிற காரியங்களை, ஒரு செய்தியாகக் கேட்டு விட்டுப் போகக் கூடாது. அதை ஒரு ஜெபக் குறிப்பாக மாற்றி, அதற்காக ஜெபிக்க வேண்டும்.

நெகேமியா எருசலேமிலுள்ள காரியங்களை அறிந்து, அதை ஒரு பாரமாக எடுத்துக் கொண்டு ஜெபிக்க ஆரம்பித்தார். அப்படி அவர் ஜெபிக்க ஆரம்பித்ததினால்தான், அவர் மூலமாய் கர்த்தர் எருசலேமைக் கட்டியெழுப்பச் சித்தமானார்.

நாம் ஒவ்வொருவரும் நெகேமியாவைப் போல மாற வேண்டும். தேசத்திற்கான காரியங்களை அறிந்து நாமே ஜெபிக்க வேண்டும்.

“நாம் வசிக்கும் பட்டணத்தைச் சுற்றிலும், அல்லது நம்முடைய கிராமத்தைச் சுற்றிலும் நடக்கிற சம்பவங்கள், காரியங்கள் என்ன? அங்கு கிரியை செய்து கொண்டிருக்கிற விக்கிரகத்தின் காரியங்கள் என்ன? சாத்தானின் அரண்கள் என்னென்ன?” என்று அறிந்து,

அதற்காக ஜெபிக்க வேண்டும். நீங்கள் ஜெபிக்க ஜெபிக்க, கர்த்தர் அந்தக் காரியத்திலே செயல்படுவதைப் பார்க்கலாம்.

# தீர்க்கதரிசனத்தை அறிந்து ஜெபிக்க வேண்டும்!

**“கல்தேயருடைய ராஜ்யத்தின்மேல் ராஜாவாக்கப்பட்ட மேதிய குலத்தானாகிய அகாஸ்வேருவின் புத்திரனான தரியு ராஜ்யபாரம்பண்ணுகிற முதலாம் வருஷத்திலே,**

**தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன்.” தானி. 9:1, 2.**

அந்தச் சமயத்தில் தானியேல், “நாம் கல்தேயர் தேசத்தில் ஒரு அடிமையாக இருக்கிறோம்! கர்த்தர் நம் தேசத்து ஜனத்தை அடிமையாக ஒப்புக் கொடுத்து விட்டார்! அதைக் குறித்து என்ன தீர்க்கதரிசனம் இருக்கிறது? இந்த அடிமைத்தனம் எவ்வளவு நாள்?” என்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, எரேமியா தீர்க்கதரிசனப் புத்தகத்தை வாசித்தார்.

தானியேல் அதை வாசித்துப் பார்த்தபோது, “இதுதான் விடுதலையின் வருஷம்! இப்பொழுதுதான் கர்த்தர் செயல்படப் போகிறார். எரேமியா தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுகிற காலம் இதுதான்!” என்பதை அறிந்து கொண்டார்.

“தீர்க்கதரிசனத்தின் மூலமாக தேசத்தில் இனி என்ன நடக்க போகிறது?” என்பதை தானியேல் அறிந்து கொண்ட உடனே, உபவாசம் பண்ணி, இரட்டிலும்,

சாம்பலிலும் உட்கார்ந்து, ஜெபத்தினாலும், விண்ணப்பத்தினாலும் கர்த்தருடைய முகத்தைத் தேடினார்.

**"நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி,...என் விண்ணப்பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செலுத்திக்கொண்டிருந்தேன்." (தானி. 9:3-20)** என்று தானியேல் சொல்கிறார்.

தானியேல், தன்னுடைய பாவத்தையும், தன் ஜனத்தின் பாவத்தையும் அறிக்கை செய்து, "ஆண்டவரே! எங்களை மன்னியும், எங்களுக்கு இரங்கும். உம்முடைய தீர்க்கதரிசனத்தின்படி ஜனத்தை விடுதலையாக்கும்!' என்று, தன் ஜனத்திற்காக, தன் தேசத்திற்காகக் கருத்தாக ஜெபம் செய்தார்." என்பதாக வேதாகமத்திலே வாசிக்கிறோம்.

அப்படி ஜெபித்ததினால்தான், கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி, "நீ எனக்கு மிகவும் பிரியமானவன். நீ ஜெபிக்கத் தொடங்கியபோதே கட்டளை வெளிப்பட்டது." என்று, கர்த்தர் சொல்லச் சொன்னார்.

நாமும்கூட தானியேலைப்போல, "இந்தியாவைக் குறித்து என்ன தீர்க்கதரிசனம்? இந்தியாவிலுள்ள சபைகளைக் குறித்து என்ன தீர்க்கதரிசனம்? இந்தியாவிலுள்ள வாலிபர்களைக் குறித்து என்ன தீர்க்கதரிசனம்? தேசத்தைக் குறித்து தேவ ஊழியர்கள் மூலமாக என்ன வெளிப்பாடு வருகிறது? கர்த்தர் நம் தேசத்தைக் குறித்து என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறார்? அடுத்து நம் தேசத்தில் என்ன நடக்கப் போகிறது?" என்கிற காரியங்களை நாம் அறிந்து, அதற்காக ஜெபிக்க வேண்டும்.

இந்நாட்களில் பல தீர்க்கதரிசிகள் மூலமாக, அவ்வப்போது கர்த்தருடைய வார்த்தைகள் வெளிப்பட்டுக்

கொண்டிருக்கிறது. அனேகருக்கு அதில் நம்பிக்கையில்லை. ஆனால், நீங்கள் அதையெல்லாம் விட்டு, ஜெபம் பண்ணுகிற பிள்ளைகளாக, ‘தேசத்தைக் குறித்து தேவன் என்ன சொல்லியிருக்கிறார்?’ என்பதை அறிந்து, அதற்காகக் கவனமாக ஜெபிக்க வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்பு, “வாலிபர்களை நான் தேசம் முழுவதும் சேனையாய் எழுப்பப் போகிறேன். வாலிபர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்” என்று கர்த்தர் சொன்னார்.

அதற்குப் பிறகு, கடந்த சில வருடங்களாக வாலிபர்களைக் குறித்து நாங்கள் தொடர்ந்து விசேஷமாக ஜெபிக்க ஆரம்பித்தோம்.

பாருங்கள், இன்றைக்கு நாங்கள் எங்கு போய் கூட்டம் நடத்தினாலும், வாலிபர்கள் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டு வருகிறார்கள்! இரட்சிக்கப்படுகிறார்கள்! அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள்! வாலிபர்கள் கர்த்தருக்காக சேனை சேனையாக எழும்ப ஆரம்பித்து விட்டார்கள்!

எந்த ஊழியக்காரர்களைக் கொண்டு கர்த்தர் வெளிப்படுத்தினாலும், அந்த வார்த்தையை நாம் ஏற்றுக் கொண்டு, அதற்காக நாமே ஜெபிக்க வேண்டும். ஒரு தேசத்தில், “இந்த மாதிரியான ஒரு காரியம் நடக்கப் போகிறது!” என்று கர்த்தர் சொல்வாரானால், அந்த தீர்க்கதரிசனத்தை நாம் உள் வாங்கிக் கொண்டு, அதற்காக ஜெபிக்க வேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாகச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை வைத்து, தானியேல் ஜெபம் பண்ணினார். தானியேலுக்கு எப்படிப்பட்ட ஒரு நல்ல இருதயம் பாருங்கள்! “கர்த்தர் எரேமியா மூலமாகச் சொன்னால், அது எப்படி நடக்கும்? என்னிடம் கர்த்தர் பேசட்டும்...பிறகு பார்க்கலாம்...” என்று தானியேல் சொல்லவில்லை. எரேமியா மூலமாகச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனமானாலும், “அதைச் சொன்னது கர்த்தர்!” என்று தானியேல் திட்டமாக அறிந்திருந்தார்.

ஆகவேதான், தானியேல் அதைச் சரியாகப் புரிந்து கொண்டு, விசுவாசித்து ஜெபித்தார்.

இந்தியாவைக் குறித்த பல தீர்க்கதரிசனங்களைக் கர்த்தர் தந்திருக்கிறார். இந்தக் கடைசி நாட்களில், தேசத்தைக் குறித்த நல்ல தீர்க்கதரிசனங்கள் மற்றும் 'தேசத்தில் கர்த்தர் என்ன செய்யப் போகிறார்?' என்கிற காரியங்களைக் குறித்த பல வெளிப்பாடுகள், பல தேவ மனிதர்கள் மூலமாக வந்து கொண்டிருக்கின்றன.

அதை நாம் உடனே உள் வாங்கிக் கொண்டு, அதற்காக ஜெபிக்க வேண்டும். அனேக தேவப் பிள்ளைகள் அதற்காக ஜெபிப்பதில்லை. கர்த்தர் ஒரு காரியத்தைக் குறித்து தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தினால், நாம் அதற்காக ஜெபிக்கும்போதுதான் அந்தக் காரியம் நிறைவேறும்.

**இந்தியாவிற்கு இது எழுப்புதலின் காலம்!** அதற்கான அடையாளங்களை நாம் தேசத்தில் பார்க்கிறோம். "என் ஆவியை நான் எல்லோர் மேலும் அளவில்லாமல் ஊற்றப் போகிறேன்!" என்று கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

அப்படியானால், இது கடைசிக் காலம்! அதாவது, ஆவியானவர் ஊற்றப்படுகிற காலம்! ஆக, இப்பொழுது நாங்கள் எங்கு ஊழியத்திற்குப் போனாலும், "உம்முடைய ஆவியை ஊற்றும்!" என்று, கர்த்தர் கொடுத்த வார்த்தையைச் சொல்லி, ஜெபித்து வருகிறோம்.

இப்படியாகக் கர்த்தர் வெளிப்படுத்துகிற தீர்க்கதரிசனங்களை வைத்து, அதைச் சொல்லி, நாமே ஜெபிக்க வேண்டும். அது ரொம்பக் கருத்தான ஒரு ஜெபமாக இருக்க வேண்டும். தானியேல் அப்படித்தான் ஜெபம் பண்ணினார். நாமும் அப்படித்தான் ஜெபிக்க வேண்டும்.

"நம்முடைய தேசத்தைக் குறித்து, சபைகளைக் குறித்து, கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறார்? இனி வரப் போகிற நாட்களைக் குறித்து, முழு இந்தியாவையும்

குறித்துக் கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறார்?” என்று, அதைப் பற்றியெல்லாம் அறிந்து, அதைச் சொல்லி ஜெபிக்க வேண்டும். “யார் மூலமாகவாவது கர்த்தர் சொல்லட்டும்...” என்று எண்ணாதபடி நீங்களே ஜெபிக்கலாம்.

எதற்காக ஜெபிக்க வேண்டும்? கர்த்தர் தீர்க்கதரிசனமாக உங்களோடு பேசுவார். நீங்கள் உங்களையே சாதாரணமாக நினைக்காதிருங்கள்! நல்லதொரு ஜெப வீரனாக (வீராங்கனையாக) மாறி விட்ட **உங்களிடம் சொல்லாமல், கர்த்தர் தேசத்தில் எதையுமே செய்ய மாட்டார்.**

கர்த்தர், தேசத்தில், தான் செய்யப் போகிற காரியங்களைக் குறித்து உங்களிடத்தில் வெளிப்படுத்துவார். அதை வைத்து தேவ சமூகத்தில் நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

நாங்கள் பல உலக நாடுகளுக்கு ஜெபம் நடத்தப் போகும்போதெல்லாம், அந்தந்த நாடுகளிலே “என்ன நடக்கும்? எப்படி எழுப்புதல் வரும்?” என்று பல காரியங்களைக் குறித்து கர்த்தர் பேசுவார்.

அதை வைத்து நாங்கள் ஜெபம் பண்ணுவோம். நாங்கள் அப்படியாக ஜெபிக்க ஜெபிக்க, அந்தக் காரியங்கள் நடக்கின்றன. அந்தந்த நாடுகளில் கர்த்தர் சொன்ன காரியங்கள் நடப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

## இரகசியங்களை அறிந்து ஜெபிக்க வேண்டும்!

தேசங்களில் பல காரியங்கள் இரகசியமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன! அதாவது, மறைமுகமாக பல காரியங்களை தேசத்தில் பிசாசானவன் செய்து கொண்டிருக்கிறான்.

ஆவிக்குரிய உலகத்தில் சாத்தான் பல விதமான காரியங்களைத் திட்டமிட்டுச் செய்கிறான்.

அப்படிப்பட்ட **இரகசியங்களை அறிந்து ஜெபம் பண்ண வேண்டும்.**

பொதுவாக, “தேசத்தில் கிரியை செய்கிற விக்கிரக ஆவிகள் அழிய வேண்டும். வேசித்தனத்தின் ஆவிகள் அழிய வேண்டும். இந்த மாதிரியான பிசாசின் கிரியைகள் தேசத்தை விட்டே ஓட வேண்டும்.” என்று நாம் ஜெபிக்கிறோம்.

இதையும் தாண்டி, இன்னும் கொஞ்சம் ஆழமாகக் கர்த்தரோடு நெருங்கினால், நம்முடைய தேசத்தில் எந்தெந்த எல்லைகளிலே பிசாசானவன் எந்தெந்த மாதிரியாக, தந்திரமாகக் கிரியை செய்கிறான்? என்று, கர்த்தர் வெளியரங்கமாக வெளிப்படுத்துவார். கர்த்தர் வெளிப்படுத்துகிற அப்படிப்பட்ட காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

“இந்த மாதிரியான காரியத்திற்கு வேதாகமத்தில் ஆதாரம் இருக்கிறதா?” என்று பார்த்தால்,

**“...நான் என் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், யூதாவின் மூப்பர்கள் எனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறபோதும், கர்த்தராகிய ஆண்டவருடைய கரம் அங்கே என்மேல் அமர்ந்தது.**

**அப்பொழுது இதோ, அக்கினிச்சாயலாய்த் தோன்றுகிற ஒருவரைக் கண்டேன்; அவருடைய இடுப்புக்குக் கீழெல்லாம் அக்கினியும் அவருடைய இடுப்புக்கு மேலெல்லாம் சொகுசாவைப்போல் பிரகாசிக்கிற சாயலுமாயிருந்தது.**

**கைபோல் தோன்றினதை அவர் நீட்டி, என் தலைமயிரைப் பிடித்து என்னைத் தூக்கினார். ஆவியானவர் என்னைப் பூமிக்கும் வானத்துக்கும் நடுவே கொண்டுபோய், தேவதரிசனத்திலே என்னை எருசலேமில் வடதிசைக்கு எதிரான உள்வாசலின்**

**நடையிலே விட்டார்; அங்கே எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் ஸ்தானம் இருந்தது.'' எசேக். 8:1-3.**

**"நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந் தீரப்பட்டிருந்தன.'' எசேக். 8:10.**

இஸ்ரவேல் மூப்பர்கள் எல்லோரும் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசியும் அங்கே இருக்கிறார். அப்பொழுது, எசேக்கியேல் தீர்க்கதரிசி, "கர்த்தருடைய கரம் என் மேல் வந்து அமர்ந்தது.

அப்பொழுது இதோ அக்கினி மயமாகத் தோன்றுகிற ஒருவரை நான் கண்டேன்..." என்பதாக, தனக்கு நேர்ந்த அனுபவத்தை எழுதுகிறார்.

எசேக்கியேலின் தலை மயிரைப் பிடித்து, வானத்துக்கும், பூமிக்கும் நடுவே கொண்டு போனது யார்? பரிசுத்த ஆவியானவர்! ஆவியானவரின் கரம் இறங்கியிருக்கிறது! கர்த்தருடைய கரம் அவரை எடுத்து, வானத்துக்கும், பூமிக்கும் நடுவே கொண்டுபோய், எருசலேமிலுள்ள தேவாலயத்தின் ஒரு வாசலில் கொண்டுபோய் விடுகிறார். "அங்கே அருவருப்பான ஒரு காரியம் இருந்தது..." என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரியின் சரீரம் வீட்டுக்குள்ளேதான் இருக்கிறது. ஆனால், அவர் ஆவிக்குள்ளாக எடுத்துக் கொள்ளப்பட்டு, எருசலேம் தேவாலயத்திற்குள்ளே கொண்டு போய் விடப்படுகிறார்! அங்கே நடக்கிற அருவருப்பான எல்லாக் காரியங்களும் எசேக்கியேலுக்குத் தெரிகிறது! ஆனால், அந்த ஆலயத்திற்குள் இருக்கிறவர்களால் எசேக்கியேலைப் பார்க்க முடியவில்லை.

ஏனென்றால், கர்த்தர் எசேக்கியேலை ஆவிக்குள்ளாக்கிக் கொண்டுப்போய், அங்கே, உள்ளே நடக்கிற காரியங்களை அவருக்குக் காட்டினார். வெளிப் பார்வைக்கு அது தேவாலயம், ஜனங்கள் எல்லோரும் வந்து ஆராதித்து விட்டுப் போனார்கள், உண்மைதான்! ஆனால், அந்த ஆலயத்திற்குள்ளே இரகசியமாய் அங்குள்ள சில மூப்பர்கள், சில ஆசாரியர்கள் விக்கிரக வணக்கம் செய்து கொண்டிருந்தார்கள்! அந்தக் காரியம், அந்த ஆலயத்திற்குள்ளே இரகசியமாக நடந்து கொண்டிருந்தது. அது வெளியே யாருக்கும் தெரியாது. கர்த்தர் எசேக்கியேலை ஆவிக்குள்ளாக்கி, ஆலயத்திற்குள்ளே கொண்டுபோய், அங்கே நடந்து கொண்டிருந்த காரியங்களைக் காண்பித்து, அதற்காக ஜெபம் பண்ணவும் ஏவினார்.

இப்படியாக, அந்தரங்கத்தில் இரகசியமாக நடக்கிற காரியங்களை, கர்த்தர் நமக்குக் காண்பிக்கிறார்.

எதற்காக இப்படிப்பட்ட இரகசியமான காரியங்களைக் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்துகிறார்? என்றால், அந்தக் காரியத்திற்காக ஜெபம் பண்ணுவதற்காகத்தான்! அதாவது, இரகசியங்களை தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்குக் கர்த்தர் வெளிப்படுத்தி, நம்மை ஜெபிக்க வைக்கிறார்.

தேவப் பிள்ளைகளாகிய நாம் பரிசுத்த ஆவிக்குள்ளே நிரம்பி ஜெபிக்கும்போது, இரகசியங்களைக் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்துவார். ஆவிக்குரிய உலகத்தைக் கர்த்தர் நமக்குக் காண்பிப்பார்.

பிசாசானவன் சும்மா இருக்க மாட்டான். தன்னால் முடிந்த அளவுக்கு அவன் போராடுவான். “பில்லி சூனியங்கள், மந்திரங்கள் மூலமாக என்னவெல்லாம் செய்யலாம்?” என்று, மிகத் தீவிரமாக பிசாசானவன் யுத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறான். நீங்கள் ஆவிக்குள் நிரம்பி ஜெபித்தால்தான், ஆவியானவருடைய வெளிச்சத்தில் காரியங்களை

அறிந்து கொண்டு, ஜெபிக்க முடியும். இப்படியாக, நாமே தேவ சமூகத்தில் இரகசியங்களை அறிந்து ஜெபிக்க வேண்டும்.

நீங்கள் பரிசுத்த ஆவிக்குள் நிரம்பி ஜெபிக்கும்போது, சில சமயங்களில் கர்த்தர் உங்களை ஆவிக்குரிய உலகத்திற்குள் கொண்டுபோய் நிறுத்துவார். சில சமயங்களில், சாத்தானுடைய எல்லைகளுக்கு உள்ளேயேகூட கர்த்தர் உங்களைக் கொண்டுபோகக் கூடும்! சிலருக்கு கர்த்தர் அப்படிப்பட்ட அனுபவங்களைக் கொடுத்து நடத்துவார்.

கர்த்தர் அப்படிப்பட்ட ஆவிக்குரிய அனுபவங்களுக்குள் நம்மை நடத்துவது, நம்மை நாமே பெருமை பாராட்டிக் கொள்வதற்காக அல்ல. ஜெபத்திற்காகவும், அந்த ஜெபத்தின் மூலமாக கர்த்தருடைய திட்டம் தேசத்தில் நிறைவேறுவதற்காகவும், பிசாசின் தந்திரங்கள் அழிக்கப்படவும்தான் என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொண்டு நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் பெரிய வெற்றியைத் தருவார்.

ஒருமுறை, எங்கள் ஊருக்கு அருகாமையில் இருக்கிற ஒரு விக்கிரகக் கோவிலில், எனக்கு விரோதமாக பில்லி சூனியம் செய்கிற காரியத்தைக் கர்த்தர் என் ஜெப வேளையில் எனக்குக் காண்பித்தார். அதற்காக நான் ஜெபித்தபோது, கர்த்தர் எனக்கு அந்தக் காரியத்தில் ஜெயத்தைக் கொடுத்தார்.

ஒரு சமயம், வட இந்தியாவிலிருக்கிற, எனக்கு அறிமுகமில்லாத ஒரு தேவ ஊழியர், என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, “நான் திருநெல்வேலிப் பக்கமே வந்ததில்லை. ஒருமுறை வந்து உங்களையெல்லாம் பார்க்க வேண்டும்.” என்று பேசி விட்டு, எனக்காக ஜெபிக்கும்போது, அந்த ஜெபத்தின் இடையே எங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஒரு ஊரின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த ஊர் பில்லி சூனியம் வைக்கிறதுக்குப் புகழ் பெற்ற ஊர்.

அந்த ஊரிலுள்ள ஒரு விக்கிரகக் கோவிலில் பில்லி சூனியம் செய்து, உங்களுக்கு விரோதமாகப் பிசாசை ஏவி விடுகிறார்கள். ஆனால், கர்த்தர் உங்களைப் பாதுகாத்து, பிசாசின் கிரியைகளை அழித்துப் போடுகிறார்." என்று சொன்னார். பாருங்கள், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு, அந்த ஊரிலுள்ள கோவிலில்தான் பில்லி சூனியம் வைப்பார்கள் என்று பொதுவாகத் தெரியும். ஆனால் சம்மந்தமே இல்லாத, எங்கேயோ இருக்கிற ஒரு தேவ ஊழியருக்கு, இங்கு நடக்கிற, அதுவும் அந்தக் கோவிலுக்குள் நடக்கிற காரியங்கள் எப்படித் தெரிந்தது?

கர்த்தர்தான் அந்த மாதிரியான காரியங்களை அவருக்கு வெளிப்படுத்தினார்! **ஜெபிக்கிற தேவப் பிள்ளைகளுக்கு, ஆவியானவர் இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்!**

நீங்கள் ஜெபித்தால், முழு இந்தியாவைக் குறித்தும் கர்த்தர் உங்களுக்கு வெளிப்படுத்துவார்! உலகத்தைக் குறித்து வெளிப்படுத்துவார்! நீங்கள் ஜெபிக்க ஜெபிக்க, சாத்தானின் வல்லமை அழிக்கப்படும்!

எப்பொழுது சாத்தானின் தந்திரங்கள் வெளிப்படுத்தப்படுகிறதோ, அப்பொழுதே அவன் தோற்று விட்டான்!

**"...அவனுடைய** –சாத்தானுடைய– **தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே." (2 கொரி. 2:11)** என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

"இந்திய தேசத்தைக் கறைப்படுத்த வேண்டும், இந்திய தேசத்தை சாபத்துக்குள்ளாக்க வேண்டும், இந்திய மக்களையெல்லாம் அடிமைகளாக்க வேண்டும்..." என்று சொல்லி, சாத்தான் இரகசியமாகக் காரியங்களைச் செய்வான்.

இந்த மாதிரியான சூழ்நிலையில், நாம் தேவ சமூகத்திற்குப் போய் ஆவியில் நிறைந்து ஜெபிக்கும்போது, ஆவியானவர் சாத்தானுடைய

இரகசியக் காரியங்களை நமக்கு வெளிப்படுத்தி, "இதற்காக ஜெபம் பண்ணு..." என்று நம்மை ஜெபிக்கத் தூண்டுவார். ஜெபித்த உடனே சாத்தானின் கிரியைகள் அழிந்து விடும். இதுதான் இரகசியங்களை அறிந்து ஜெபிப்பது!

அதாவது, சாத்தானின் தந்திரங்களை, கிரியைகளை அறிந்து ஜெபிப்பது! கர்த்தர் சகல இரகசியங்களையும் நமக்குச் சொல்லிக் கொடுப்பார். கர்த்தருடைய ஆவியானவர், இப்படிப்பட்ட கிருபைகளை நமக்குத் தருவாராக!

# கர்த்தருடைய இருதயத்தை அறிந்து ஜெபிக்க வேண்டும்!

பொதுவாக, வழக்கத்தின்படி ஜெபிக்கிற பல ஜெபக் காரியங்கள் நமக்கு இருக்கலாம்! மிஷனெரிகளுக்காக, சபைகளுக்காக, தேவ ஊழியர்களுக்காக வழக்கமாக நாம் ஜெபிக்கிறோம்.

நான் வழக்கமாக தமிழ்நாட்டிலிருக்கிற ஒரு மாவட்டத்திற்காக ஜெபம் பண்ணுவேன். இந்தியாவிலிருக்கிற ஒரு மாநிலத்திற்காக ஜெபம் பண்ணுவேன். கர்த்தர் எனக்குக் காண்பிக்கிற ஒரு தேசத்திற்காக ஜெபம் பண்ணுவேன். அதோடு மட்டும் நின்று விடாமல்,

"ஆண்டவரே, உம்முடைய இருதயத்தில் இருப்பதை எனக்கு வெளிப்படுத்தும். நான் ஜெபிக்கிறேன்." என்று, அவரிடத்தில் நான் கேட்டு அதற்காக ஜெபிப்பேன். நீங்கள் கர்த்தரிடத்தில் கேட்கும்போது, அவர் தன் இருதயத்தில் இருக்கிற பாரத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

நீங்கள், "எதற்காக ஜெபிக்க வேண்டும்?" என்று கர்த்தர் உங்களுக்கு வெளிப்படுத்துவார். அந்த ஜெப

பாரத்தைக் கர்த்தர் உங்களுக்கு உண்டாக்குவார். 'இதற்காக ஜெபம் பண்ணு...' என்று, ஆவியானவர் உங்களோடு பேசுவார். அதற்காக ஜெபித்தால், அந்த ஜெபம் அதிக வல்லமை உள்ளதாயிருக்கும். காரணம், நீங்கள் கர்த்தருடைய இருதயத்தை அறிந்து, அவரோடு இணைந்து ஜெபிக்கிறீர்கள்!

சோதோம் பட்டணத்தில் பாவம் பெருகி விட்டது. "அதை அழிக்க வேண்டும்!" என்று பரலோகத்திலிருக்கிற கர்த்தர் முடிவு செய்து விட்டார். ஆனால், கர்த்தர் எடுத்த அந்த முடிவைக் குறித்து, பூலோகத்தில் இருக்கிற யாருக்குமே தெரியாது. காரணம், அது தேவ இரகசியம்!

ஆனால் அதே சமயத்தில், சோதோம் பட்டணத்தை அழிப்பதற்காக கர்த்தர் பூமிக்கு இறங்கி வந்தார். கர்த்தராகிய தேவன், தான் ஒரு காரியத்தைச் செய்ய, யாரிடமும் அவர் அனுமதி வாங்க வேண்டிய அவசியமே இல்லை.

ஆனால், கர்த்தர் சொல்கிறார் பாருங்கள்: "**நான்** –கர்த்தர்– **செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" (ஆதி. 18:18)** என்று.

அதாவது, "என் இருதயத்தில் இருப்பதை நான் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்துவேன்..." என்று கர்த்தர் சொன்னார்.

சோதோம், கொமோராவில் பாவம் பெருகி, அது பரலோகம் வரை போய் எட்டி விட்டது. அந்த மக்களை அழிக்கச் சித்தம் கொண்ட கர்த்தருடைய உள்ளத்தில், "நான் உண்டாக்கிய மக்கள், பாவத்தினால் அழிந்து சாகிறார்களே..." என்கிற ஒரு துக்கம். அதை ஆபிரகாம் புரிந்து கொண்டார்.

அதற்காக திறப்பில் நின்று ஜெபிக்க வேண்டும். 6 முறை திரும்பத் திரும்ப ஆபிரகாம் ஜெபித்தார். ஆபிரகாமுடைய அந்த ஜெபத்தைக் கேட்டு, கர்த்தருடைய உள்ளம் சந்தோஷப்பட்டது. அதனால்தான், "ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன்!" என்று அழைக்கப்பட்டார்.

நீங்கள் வழக்கமாக ஜெபிப்பது தவறல்ல. ஜெபித்து முடித்த பிறகு, "ஆண்டவரே, உமது உள்ளத்தில் ஏதாவது பாரம் இருந்தால் என்னிடத்தில் சொல்லும். நான் அதற்காக ஜெபிக்கிறேன்." என்று, கர்த்தருடைய சத்தத்திற்காகக் காத்திருக்க வேண்டும்.

அப்படி நீங்கள் அவருடைய சமூகத்தில் காத்திருக்கும்போது, கர்த்தர் உங்களைப் பார்த்து, ஒருவேளை, "அரசியல்வாதிகளைக் குறித்து எனக்குப் பாரமாக இருக்கிறது. நீ அவர்களுக்காக ஜெபம் பண்ணு." என்று சொல்லக் கூடும்! அதற்காக நீங்கள் ஜெபிக்க ஆரம்பித்தால், உங்களை அறியாமலேயே கண்ணீரோடுகூட ஜெபிப்பதற்கான ஒரு பாரம் உங்களுக்குள் உண்டாகும். அல்லது, ஆவியில் நிரம்பி வைராக்கியமாய் ஜெபிப்பீர்கள். மொத்தத்தில், அந்த ஜெபமே வித்தியாசமாக மாறி விடும்.

சில சமயம், "இந்தியாவிலிருக்கிற செல்வந்தர்களைப் பார். அவர்களெல்லோரும் விக்கிரகத்தினால் தேசத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள்! சுயநலவாதிகளாக இருக்கிறார்கள்! அவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்க வேண்டும்!" என்று கர்த்தர் நம்மிடத்தில் உணர்த்துவார். அப்படி அவர் நம்மிடத்தில் உணர்த்தினால், அதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்.

சில சமயம் கர்த்தர் என்னிடத்தில், "சினிமாத் துறையில் இருக்கிற மக்களைப் பார். அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்!" என்று சொல்வார். நான் அந்த மக்களுக்காக அனேக முறை கண்ணீரோடு ஜெபித்திருக்கிறேன். இன்றைக்கு, அந்தத் துறையிலுள்ள மக்கள் இரட்சிக்கப்பட்டு வருவதைப் பார்க்க முடிகிறது.

இப்படியாக, கர்த்தர் தன் இருதயத்திலுள்ள பாரத்தை நம்மிடத்தில் சொல்லி, அதற்காக நாம் ஜெபிக்கும்போது, அந்தக் காரியத்தில் கர்த்தர் கிரியை செய்வதைப் பார்க்கலாம். ஆக, கர்த்தருடைய இருதயத்தின் பாரத்தை நாம் அறிந்து, அதற்காக ஜெபிக்க வேண்டும்.

மலையில் மோசே தேவ சமூகத்தில் காத்திருந்தார். "மலையின் கீழே என்ன நடக்கிறது?" என்று மோசேக்குத் தெரியாது. அங்கே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் விக்கிரகத்தை உண்டாக்கி, விக்கிரக வணக்கம் செய்து, குடித்து, வெறித்து, நடனமாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தர்,

**"...மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்." (யாத் 32:7)** என்று சொன்னார்.

அதைக் கேட்ட மோசேக்கு அதிர்ச்சியாக இருந்தது. "கீழே நடக்கிற காரியம் என்ன?" என்று மோசேக்குத் தெரியாது. ஆனால் சகலவற்றையும் அறிந்த கர்த்தர், மோசேயினிடத்தில், "உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்.

கீழே சென்று பார்." என்று சொல்லி விட்டு, "இந்த ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள். இவர்களை நம்பிப் பிரயோஜனமில்லை. அவர்களை அழித்து விடுகிறேன். உன்னை நான் பெரிய ஜாதியாக்குவேன்." என்று கர்த்தர் சொன்னார்.

"அந்த ஜனங்களுடைய பாவம் கர்த்தரைத் துக்கப்படுத்தி விட்டது. கர்த்தர் அவர்கள் மேல் கோபம் கொண்டு, அவர்களை அழிக்கச் சித்தம் கொண்டார்." என்று, கர்த்தருடைய கோபத்தை மோசே உடனே புரிந்து கொண்டார். மோசே அதோடு நின்று விடாமல், உடனே திறப்பிலே நின்று, **"...உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும்." (யாத். 32:12)** என்று சொல்லி, கர்த்தரிடத்தில் கெஞ்சி ஜெபிக்க ஆரம்பித்தார்.

பாருங்கள், மோசேயின் அந்த ஜெபத்தின் நிமித்தம் கர்த்தர் மனம் மாறினார்! "மாறாத தேவன், ஒரு மனிதனுடைய ஜெபத்தினால் மனம் மாறினார்!" என்று வேதாகமத்தில் பார்க்கிறோம்.

அப்படியானால், கர்த்தருடைய இருதயத்தின் பாரத்தை நாம் புரிந்து கொண்டு ஜெபிக்கும்போது, கர்த்தர் அந்தக் காரியத்தில் கிரியை செய்வார்.

**“நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.” 1 சாமு. 15:11.**

“சவுலை ராஜாவாக்கியது எனக்குத் துக்கமாய் இருக்கிறது...” என்று, கர்த்தர் சாமுவேலினிடத்தில் சொன்னார். கர்த்தர் ஒரு நிமிடத்தில் தன்னிடத்தில் சொன்ன அந்த வார்த்தைக்காக, சாமுவேல் இரவு முழுவதும் கர்த்தரை நோக்கி மன்றாடினார். ஏனென்றால், “கர்த்தருடைய உள்ளம் துக்கப்பட்டு விட்டதே...” என்கிற ஒரு பாரம் சாமுவேலினிடத்தில் இருந்தது.

**“...கர்த்தர் மனஸ்தாபப் பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.” 1 சாமு. 15:35.**

கர்த்தருடைய உள்ளம் துக்கப்பட்ட காரியம், சாமுவேலைப் பாதித்தது. கர்த்தருடைய இருதயத்தையும், துக்கத்தையும்கூட சாமுவேல் புரிந்து கொண்டார்! தேவப் பிள்ளைகளாகிய நாமும் சாமுவேலைப்போல மாற வேண்டும்.

கர்த்தரோடுகூட அப்படிப்பட்ட நெருக்கமான ஒரு ஜெப அனுபவத்திற்குள் நாம் கடந்து வர வேண்டும். கர்த்தருடைய இருதயத்தின் பாரத்தை நாம் புரிந்து கொண்டு ஜெபிக்க வேண்டும். சில சமயங்களில், கர்த்தர் வித்தியாசமாகப் பேசுவார்.

ஒருநாள் அதிகாலை வேளையில் கர்த்தர் என்னை எழுப்பினார். உடனே எழும்பி, தேவ சமூகத்தில் முழங்கால்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தேன். பொதுவாக நான் ஜெபிக்கும்போது, துதித்து, பாடல் பாடி, ஸ்தோத்திரம்

பண்ணி, தேவப் பிரசன்னத்திற்குள் வந்த பிறகு, வசனத்தை தியானித்து, பிறகுதான் ஜெபிக்க ஆரம்பிப்பேன்.

ஆனால், அன்றைக்கு நான் ஜெபிக்க முழங்கால்படியிட்ட உடனேயே தேவ பிரசன்னம் என்னை அப்படியே நிரப்பிற்று.

அது வித்தியாசமாய் எனக்கு இருந்தது. கர்த்தர் என் கண்களைத் திறந்தார். இயேசு எனக்கு முன்பாக நாற்காலியில் கெம்பீரமாக உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்பாக நான் அப்படிப்பட்ட ஒரு காட்சியைப் பார்த்ததேயில்லை.

அவர் என்னிடத்தில், "முக்கியமான ஒரு காரியத்திற்காக நீ ஜெபம் பண்ண வேண்டும்." என்று சொல்லி விட்டு, இந்தியாவிலிருக்கிற சிறு பிள்ளைகள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள்? என்பதைப் பற்றி அனேகக் காரியங்களைக் குறித்து என்னோடு பேசினார்.

"பிசாசு சிறு பிள்ளைகள் மீது கவனம் வைத்திருக்கிறான்! கருவிலிருக்கிற குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள்! தவறான மருந்துகளினால் குழந்தைகள் அழிக்கப்படுகிறார்கள்! பிறந்த குழந்தைகளைக் கடத்துகிறார்கள்! சிறு பிள்ளைகள் பலி செலுத்தப்படுகிறார்கள்!

பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளைப் புரிந்து கொள்ளாமல், அவர்களை வேதனைப்படுத்துகிறார்கள்! குழந்தைகள் காப்பகத்தில்கூட பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள்! சில சிறு பிள்ளைகளுக்காக நடத்தப்படுகிற காப்பகங்களில் பிள்ளைகளின் பெயர்களைச் சொல்லி, வெளி நாட்டில் பணம் வாங்கிக் கொண்டு, காப்பகத்திலிருக்கிற பிள்ளைகளைத் தரையில் படுக்க வைத்து விட்டு, தங்களுடைய பிள்ளைகளை மட்டும் வெளி நாடுகளில் படிக்க வைக்கிறார்கள்! நீ அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்!" என்று, சிறு பிள்ளைகளைக் குறித்து ஒவ்வொரு காரியங்களாகக் கர்த்தர் என்னிடத்தில் பகிர்ந்து கொண்டு, மிகவும் துக்கப்பட்டார்.

உடனே நான் மிகுந்த பாரத்தோடு ஜெபித்தேன். அந்த நாளிலிருந்து சிறு பிள்ளைகளுக்காக நான் ஜெபிக்க ஆரம்பித்தால், அழுகையோடும், கண்ணீரோடும்தான் ஜெபித்து வருகிறேன்.

“குழந்தைகளை ஆசீர்வதித்து ஜெபிக்க வேண்டும்!” என்று கர்த்தர் சொன்னபடியினால், எல்லா நற்செய்திக் கூட்டங்களிலும் சனிக்கிழமை சிறு பிள்ளைகளைக் கொண்டு வரச் சொல்லி ஜெபித்து வருகிறேன். ஆக, ஆவியானவர்தான் அந்த ஜெப பாரத்தை நமக்குள் உண்டாக்குகிறார். அது இயேசுவின் இருதயத்தில் இருக்கிற பாரம். அதை ஊழியக்காரர்களுக்கு மாத்திரமல்ல, ஜெபிக்கிற எல்லா தேவப் பிள்ளைகளுக்கும் கர்த்தர் வெளிப்படுத்துவார்.

“வாலிபர்களுக்காக ஜெபிப்பாயா? ஊழியக்காரர்களுக்காக ஜெபிப்பாயா?” என்று, ஜெபத்தை எதிர்பார்த்து, ஜெபிக்கிற மக்களைத் தேடி கர்த்தர் வருவார். மாத்திரமல்ல, “எதற்காக ஜெபிக்க வேண்டும்? எப்படி ஜெபிக்க வேண்டும்?” என்று கர்த்தரே சொல்லித் தருவார்.

ஒருமுறை, ஒரு குறிப்பிட்ட பட்டணத்திற்கு, ஒரு நற்செய்திக் கூட்டத்திற்காகப் போயிருந்தேன். கடைசி நாளன்று மைதானமே நிரம்பி வழியத்தக்கதாக, அனேக புற ஜாதி மக்கள் வந்திருந்தார்கள். நான் தங்கியிருந்த அறையில், அந்த நாள் கூட்டத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப்பொழுது என் கண் முன்னால், ஒரு காட்சியைக் கர்த்தர் காண்பித்தார். அந்த காட்சி என்னவென்றால், ஒரு சிங்காசனத்தில் கர்த்தர் கெம்பீரமாக அமர்ந்திருப்பதைப் போன்ற ஒரு சாயல் தெரிந்தது. ஆனால், அவருடைய முகம் எனக்குத் தெரியவில்லை.

சுமார் ஆயிரம் சூரியன்கள் ஒன்று சேர்ந்து பிரகாசித்தால் எப்படி இருக்குமோ?அப்படிப்பட்ட ஒரு மகாப் பெரிய வெளிச்சம் பிரகாசித்தது.

அந்த சிங்காசனத்தின் பக்கத்தில் நான் முழங்கால்படியிட்டு, “இந்தக் கூட்டத்தை ஆசீர்வதியும் ஆண்டவரே, ஜனங்களுக்கு அற்புதங்களைச் செய்யும், இந்து மக்களை இரட்சியும்...” என்று சொல்லி ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது ஒருவர் என் பக்கத்தில் வந்து, என் தோளில் தன் கையை வைத்து, “அப்படியல்ல என் மகனே, ஆண்டவரே, இந்துக்களாக இருக்கிற என் ஜனங்கள், தங்கள் அறியாமையினால் விக்கிரகத்தை வணங்குகிறார்கள். அதை அவர்களுக்கு மன்னியும். நீர் ஒரு அற்புதம் செய்து விட்டால், அவர்கள் உம்மை ஏற்றுக் கொள்வார்கள். எனக்கு நீர் ஒரு அற்புதம் செய்ததால், நான் உம்மை ‘ஆண்டவர்’ என்று நம்பி, ஏற்றுக் கொண்டேனே! அதேபோல, என் ஜனத்திற்கும் ஒரு அற்புதம் செய்து விட்டால், அவர்களும் உம்மை நம்புவார்களே!” என்பதாக, பல காரியங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்து, என்னை ஜெபிக்க வைத்தார்.

நானும், அவர் எனக்குச் சொல்லிக் கொடுக்கக் கொடுக்க, மிகுந்த கண்ணீரோடு பல நிமிட நேரங்கள் அழுது ஜெபித்தேன். ஜெபித்து முடித்த பிறகு, “யார் என் பக்கத்தில் வந்து எனக்கு ஜெபிக்கச் சொல்லிக் கொடுத்தது?” என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, “பரிசுத்த ஆவியானவர்தான் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று சொல்லி கொடுத்தார்.” என்று கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார்.

அன்றைய நாள் கூட்டத்தில் பலத்த அற்புதங்களைக் கர்த்தர் செய்து, தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். ஆகவே, நமக்கு வழக்கமாகத் தெரிந்திருக்கிறபடி நாம் ஜெபிக்காமல், இன்னும் கொஞ்சம் ஆழமாக ஜெபத்தில் கடந்து செல்ல வேண்டும். கர்த்தர் நமக்குச் சொல்லித் தருவார். **அப்படிப்பட்ட உன்னதமான அனுபவத்திற்குள் நீங்களும் கடந்து வர வேண்டும்** என்று கர்த்தர் விரும்புகிறார்.

காரணம், கர்த்தர் இந்த தேசத்தைச் சந்திக்கிற காலம் வந்து விட்டது! அப்படியானால், ஜெபத்தில் இன்னும் தீவிரமாக மாற வேண்டும். அந்த அனுபவத்தைக் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறார்.

சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக, அமெரிக்காவில் மூன்று நாள் உபவாச ஜெபம் நடத்தி வருகிறோம். ஒவ்வொரு முறையும், கனடா தேச ஊழியத்தை முடித்து விட்டு, அமெரிக்கா தேச ஊழியங்களுக்காகச் செல்வது வழக்கம். ஒருமுறை அமெரிக்கா தேசத்திற்கு ஊழியத்திற்காகப் போக எனக்கு விருப்பமேயில்லை. காரணம், அமெரிக்காவிலுள்ள ஜனங்கள் விக்கிரகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த காரியங்களையெல்லாம் பார்த்து விட்டு, “இந்த ஜனங்கள் இப்படி விக்கிரகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களே! நாம் அமெரிக்கா தேசத்திற்காக எப்படியெல்லாம் ஜெபிக்கிறோம்? ஆனால் இந்த ஜனங்கள், இப்படி இருக்கிறார்களே!” என்று எனக்குள் ஒரு பெரிய வருத்தம்.

“இந்தியாவில் எவ்வளவோ எழுப்புதல், இந்தியாவிற்காக ஜெபித்தால் போதும். இந்த ஒருமுறை மட்டும் அமெரிக்கா ஊழியத்தை முடித்து விட்டு, அதற்குப் பிறகு அமெரிக்கா ஊழியத்திற்குப் போக வேண்டாம்.” என்று நினைத்து, ஊழியத்திற்குச் சென்று விட்டேன்.

கனடா ஊழியத்தை முடித்து விட்டு, வழக்கம்போல அமெரிக்க ஊழியத்திற்காகச் சென்றேன். மனதளவில் எனக்கு அதிக சோர்வாகவேதான் இருந்தது. இரவு 12:00 மணிக்குத்தான் ஓய்வெடுக்கச் சென்றேன். நான் மிகுந்த களைப்பாக இருந்தபடியினால், “அடுத்த நாள் முழுவதும் ஓய்வெடுக்க வேண்டும்.” என்று எண்ணினேன்.

ஆனால், கர்த்தரோ என் திட்டத்தையெல்லாம் முறியடித்து, அதிகாலை 4:00 மணிக்கெல்லாம் என்னை எழுப்பி, ஜெபம் பண்ணச் சொன்னார். நான் உடனே கீழ்படிந்து, ஜெபிக்க முழங்கால்படியிட்டேன்.

அவர் என்னிடத்தில், "மகனே, இந்த தேசத்தை நான் நேசிக்கிறேன். நீயும் நேசிக்க வேண்டும். இந்த தேசத்தை நீ வெறுக்கக் கூடாது." என்றார். அந்த வார்த்தையை நான் கேட்டவுடனே, "நான் தவறு செய்து விட்டேன், ஆண்டவரே! என்னை மன்னியும். நான் இந்த தேசத்தை நேசித்து ஜெபிக்க வேண்டும். அதற்குப் பதிலாக நான் இந்த தேசத்தை வெறுத்து விட்டேன்." என்று சொல்லி, கண்ணீரோடு ஜெபித்தேன்.

தொடர்ந்து கர்த்தர் என்னிடத்தில், "இந்த தேசம், என் பிள்ளைகளால் உருவாக்கப்பட்டது. இந்த தேசத்தில் எவ்வளவோ பரிசுத்தவான்களை நான் எழுப்பினேன். எவ்வளவோ ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு தேசமாக இருந்தது. அதனால் நீ இந்த தேசத்தை நேசிக்க வேண்டும்!" என்று சொன்னார்.

அதற்கு நான், "ஆண்டவரே, இந்த ஜனங்கள் விக்கிரகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களே!" என்று சொன்னேன். அப்பொழுது கர்த்தர், "நீ அதைப் பார்க்காதே, நீ அரசியல் ரீதியாகப் பார்க்கிறாய். சபைகளைப் பார். சபைகள்தான் இன்றைக்கு சீரழிந்து போய் கொண்டிருக்கிறது. ஊழியக்காரர்களைப் பார், அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். நீ சபைகளுக்கு, ஊழியர்களுக்கு ஜெபித்தால், இந்த தேசத்தில் எழுப்புதல் உண்டாகும். ஊழியர்கள் மாறினால், தேசம் மாறும்!" என்று எனக்குத் தெளிவுபடுத்தினார்.

பிறகு பல வருடங்களாக சபைகளுக்காக ஜெபிக்க ஆரம்பித்தோம். நாங்கள் உபவாசித்து ஜெபிப்பதை பல அமெரிக்க வெள்ளைக்காரர்கள் கேள்விப்பட்டு, "நாங்கள் ஒரு வேளைகூட சாப்பிடாமல் இருக்க மாட்டோமே! எங்களுக்கும் உபவாச ஜெபத்தைக் குறித்துச் சொல்லித் தாருங்கள்." என்று அமெரிக்க சபைகளில் எங்களை ஊழியங்களுக்காகக் கூப்பிட ஆரம்பித்தார்கள்.

அவர்களுடைய அழைப்பை ஏற்று, அங்கு கூட்டம் நடத்தி ஜெபத்தைப் பற்றிப் போதித்தபோது, "அமெரிக்கர்கள்

இப்படி ஜெபம் பண்ணியதே கிடையாது. இப்படி அழுது ஜெபிக்கிறதை நாங்கள் பார்த்ததே இல்லை.” என்று சொல்லி, சபைப் போதகர் முதலாவது வந்து தன்னை ஒப்புக் கொடுத்தார். விசுவாசிகள் எல்லோரும் ஒப்புக் கொடுத்தார்கள். பாருங்கள், நம்முடைய இருதயத்திற்குள் ஒரு காரியத்தைக் குறித்து, ஒரு தவறான அபிப்ராயம், அல்லது தவறான ஒரு எண்ணம் இருக்கும்! ஆனால் கர்த்தரோ, “எது சரி? எதை நாம் செய்ய வேண்டும்? எதை நாம் செய்யக் கூடாது?” என்று சரியாக நமக்குக் சொல்லிக் கொடுப்பார்.

## சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுடைய
## இதர ஆவிக்குரிய புத்தகங்கள்!

| | | |
|---|---|---|
| 1. | **ஜெபியுங்கள்...ஜெயம் பெறுங்கள்!** (தமிழ்/இந்தி) | ₹ **10/-** |
| 2. | **துதியுங்கள், அற்புதங்களைக் காண்பீர்கள்!** (தமிழ்) | ₹ **10/-** |
| 3. | **இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?** (தமிழ்) | ₹ **10/-** |
| 4. | **உங்களுக்குப் பிரியமானவர்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?** (தமிழ்) | ₹ **10/-** |
| 5. | **கவலையை மேற்கொள்வது எப்படி?** (தமிழ்) | ₹ **10/-** |
| 6. | **அதிகாலையில் ஆண்டவரோடு...** (தமிழ்/ஆங்கிலம் /இந்தி) | ₹ **10/-** |
| 7. | **உங்கள் பணப் பிரச்சனை மாறும்!** (தமிழ்) | ₹ **10/-** |
| 8. | **தேடி வந்தார், அற்புதம் செய்தார்!** (தமிழ்/ஆங்கிலம் /இந்தி) | ₹ **10/-** |
| 9. | **இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சுகமடைவீர்கள்! விடுதலையடைவீர்கள்!** (தமிழ்) | ₹ **15/-** |
| 10. | **ஜெபத்தின் வல்லமையும், இரகசியங்களும்!** (தமிழ்) | ₹ **100/-** |

(தபால் செலவு தனி)

காணிக்கை அனுப்பி, எமது தலைமை மற்றும்
எல்லாக் கிளை அலுவலகங்களிலும்
பெற்றுக் கொள்ளலாம்.

*Online Shopping:* **www.jesusredeemsonline.com**

தேசத்திற்காக ஜெபிக்க... நாலுமாவடி-**தேவனுடைய கூடாரத்தில்**

**ஜாமக்காரன் ஜெபம்!**

**நாள்தோறும்** காலை 10:00 - மதியம் 3:00.
இரவு 10:00 - அதிகாலை 3:00 (ஆண்கள் மட்டும்)

**அற்புத விடுதலை பிரார்த்தனை!**

**வியாழக்கிழமைதோறும்**
முற்பகல் 11:00 - மாலை 3:00.

**முழு இரவு ஜெபம்!**

**2வது சனிக்கிழமைதோறும்**
இரவு 9:00 - அதிகாலை 5:00.

**திறப்பின் வாசல் ஜெபம்!**

**கடைசி சனிக்கிழமைதோறும்**
காலை 9:00 - மாலை 3:00.

**தொடர்புக்கு: 04639-22 00 22.**

---

திருநெல்வேலி மாவட்டம்-கடையத்திற்கு
அருகிலுள்ள கீழ மாதாபுரம் -
**ஜெப மலை**யில்

**திறப்பின் வாசல் ஜெபம்!**

கடைசி சனிக்கிழமைக்கு
முந்தின **வியாழக்கிழமை**
காலை 10:00 - மாலை 3:00.

**தொடர்புக்கு: 04634-240 245.**

---

வியாதியஸ்தர்களுக்காக சிறப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்!

315000059

JESUS REDEEMS MINISTRIES

Jesus Redeems MINISTRIES

Nalumavadi-628211
Thoothukudi Dt., India.
Tel: +91-4639-22 00 22.
Fax: +91-4639- 22 00 33
Website: www.jesusredeems.com